நன்றி யாருக்கு?

க.அ. மதியழகன் B.A.

நன்றி யாருக்கு?

K. A. மதியழகன், B. A.,



திராவிடப்பண்ணை

34, சிந்தாமணி :: திருச்சி-2

இரண்டாம் பதிப்பு: 1968

உரிமையுடையது.

11319.

விலை ரூ. 1-00

சக்திவேல் பிரஸ், திருச்சிராப்பள்ளி-2.

நூலைப்பற்றி

கவ்வியிருந்த இருள் விலக ஆரம்பித்து விட்டது. கிழக்கு வானம் வெளுத்து விட்டது. இருளின் கறைகள், ஒளிரேகை பட்டு மறைய ஆரம்பித்துவிட்டது. கூடு களிலேயிருந்து வெளிவரும் புள்ளினங்கள் மதுரகீதம் பாடி உதய சூரியனை வரவேற் கிறது. எங்கும் ஒளி மயம்.

தமிழகம், தலைமுறை தலைமுறையாக கொண்டிருந்த தத்துவங்களை தலைமுழுகி விட்டு புது வாழ்வின் தலைவாயிலிலே நிற் கிறது. குருட்டுக் கோட்பாடுகள், மூட நம்பிக்கைகள், மோட்சம், நரகம், ஜாதி ஆணவம் ஆகியவை சரிந்து விழுந்துகொண் டிருக்கின்றன.

மறுமலர்ச்சி இயக்கத்தின் கால்கோள் விழா தமிழகத்தில் நடைபெற்றுவிட்டது. புதிய எண்ணம் புதிய சிந்தனை ஆகியவைக்கு தமிழர் உள்ளத்தில் இடம் ஏற்பட்டு விட் டது. வாழும் வையத்தை மறந்து வானிலே இருக்கும் வைகுண்டத்தை நோக்கி வாழ்ந் தவன் தமிழன். பொய்யும் புனைசுருட்டும், கவைக்குதவாத கட்டுக்கதைகளும், கணக் கற்ற பொய்மைக் காவியங்களும் தமிழர் வாழ்விலே நஞ்சைக் கலக்கிவிட்டது. அந்த நிலைமை மாறி மாநிலத்திலேயுள்ள மற்ற மக்களைப்போல் தமிழரும் வாழவேண்டும். உயரவேண்டும்.

அத்தகைய சிந்தனைத் தீயை அறிவியக்கம் கொளுத்தியாகிவிட்டது. தமிழரின் சிந்தனை சக்தி வேலைசெய்ய ஆரம்பித்தால் அவரை வெல்ல தரணியில் யாருமில்லை.

அத்தகைய் அறிவுப்பணியின் ஒரு துளியாக "நன்றி யாருக்கு" என்ற இந்நூலை தமிழகத்தார் முன் வைக்கின்றேன். அமெரிக்க அறிஞன் பெரிய சிந்தனையாளன் இங்கர்சாலின் "A Thanks giving Sermon" என்ற தலைசிறந்த சொற்பொழிவின் மொழி பெயர்ப்பு இந்நூல்.

தமிழர் சமுதாயத்திற்கு மிகத் தேவையான நற்கருத்துக்கள் இந்நூலிலே இடம் பெற்றுள்ளன. இங்கர்சாலின் பேச்சு வசீகர வசன காவியமட்டுமல்ல, வளமுள்ள கருத்துக்களைக் கொண்டது.

அந்தக் கருத்துக்களை தமிழர் முன்னிலையில் நல்ல முறையில் நூல் வடிவிலே வைத்திருக்கிற திராவிடப் பண்ணை உரிமையாளர், எனது நண்பர் முத்துகிருஷ்ணன் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இங்கர்சாலுக்கும் உங்களுக்கும் இடையிலே நான் நிற்க விரும்பவில்லை. இங்கர்சால் பேசட்டும் கேளுங்கள்.

K. A. மதியழகன்

நன்றி யாருக்கு?

1

பல யுகங்களுக்கு முன்னர் நமது மூதாதையர் குல்ககளிலும் இருட்டறைகளிலும் வாழ்ந்து வந்தனர். அவர்கள் உடலமும், சின்னஞ்சிறிய நெற்றியும் மயிரினால் மூடப்பட்டிருந்தன. காய், கறி, கந்த மூலங்கள் அவர்கள் உண்ட பொருள்கள். பச்சை மீனும், பாம்பு வகைகளும் அவர்கள் இச்சையுடன் விரும்பிய பொருள்கள். அவர்கள் நெருப்பைக் கண்டனர். தற் செயலாக, உராசுவதன் மூலம் எப்படித் தீயை உண்டு பண்ண முடியும் என உணர்ந்தனர். உடம்பை வெப்பமாக வைத்துக்கொள்ள, பனியின் வாடையை விரட்ட, புயலின் சீற்றத்தை சமாளிக்கத் தெரிந்துகொண்டனர். சிறு கொம்புத் தடிகளையும் முரடான கல்லாயுதங்களையும் கண்டனர். இந்தக் கருவிகளின் உதவியால், காட்டு மிருகங்களையும், சில பல நேரங்களில் தங்களைத் தாங்களையும் கொன்றனர். சன்னஞ் சன்னமாக, ஆனால் சஞ்சலத்துடன், முன்னேற்றத்தின் உருவமே தோன்ற முடியாத முறையிலே முன்னேறினர். அறிவு ஒளியை அடைய திகைத்துள்ளனர்; திணறியுள்ளனர்; திக்குமுக்காடியுள்ளனர்; தீவிரமாகப் போராடியுள்ளனர். அவனியிலுள்ள அத்தனையும் அவர்கள் அறியாததாய்

இருந்தது. எங்கு நோக்கினும் புதிராகவும் பொல்லாங்கு செய்பவையாகவும் பட்டது, வனந்திரங்கள் பூதங்கள் நிரம்பியதாயும், இருட்டோ, பேய், பிசாசு, குட்டிச் சாத்தான்கள் நிரம்பியதாயும் பட்டது.

இந்தப் பரிதாபத்திற்குரிய பஞ்சைகள் அச்சத்தின் அடிமைகள்; கனவுகளின் விளையாட்டுக் கருவிகள்.

அடிக்கடி, ஏதோ ஒரு மனிதன் எழுந்தான். தனக்கிருந்த கொஞ்சப் பகுத்தறிவை உபயோகித்து, ஏதோ புதிய வழியை, இருப்பதைக் காட்டிலும் சிறந்த மார்க்கத்தைக் கண்டுபிடித்தான். பிறகு மக்கள் அவனைக் கொலைபுரிந்தனர். இந்தக் கொடுமைக்குப் பிறகு அவனது சவக்குழி மூன்பு, அவர்களே மரியாதையுடன் தலை வணங்கினர். மீண்டும் ஓர் மனிதன் தனது சிந்தனையை வெளியிட்டான். மாண்டு ஒழிந்தான். மற்றுமொரு கல்லறை புனிதமாக்கப்பட்டது. முன்னேற்றத்தை நோக்கி இன்னொரு அடி எடுத்து வைக்கப்பட்டது. இம்மாதிரி அறியாமையும் கொடுமையும், சிந்தனையும் குற்றமும், கொலைகளும் கும்பிடும் தன்மையும், அஞ்சாமையும், அல்லலும், தன்னல மறுப்பும் நிறைந்த எண்ணற்ற நூற்றாண்டுகளைக் கடந்துதான், மனித சமுதாயம், இன்று நாம் நிற்கிற உச்சமாகிய உன்னத நிலையை அடைந்துள்ளது.

பண்டைய காட்டுமிராண்டித் தனத்திற்கும், நமது நாட்களின் நாகரீக வளர்ச்சிக்கும் இடையே உள்ள நீண்ட, வளைவான, பயங்கரப் பாதைகளை நம் மனக்கண்முன் பார்த்தால், இந்த இரண்டு தூர

மைந்த கரைகளுக்கிடையே அலைகளைப்போல் உருண்டோடிய நூற்றாண்டுகளை சிந்தனை செய்தால் நமது மூதாதையர்பட்ட இன்னல்களைப்பற்றி, புரிந்த தவறுகளைப்பற்றி, கொண்டிருந்த அறியாமை, குருட்டுக் கொள்கைகளைப் பற்றி, அடைந்திருந்த கொஞ்சம் அறவு, அருமைக் குணங்கள், அஞ்சாமை ஆகியவை பற்றி ஓரளவு உணரலாம்.

. இந்த பாதை ஓர் நீண்ட பாதை! விலங்கு கால மனிதன் முதல் விஞ்ஞானி வரை, குகை முதல் கோல மாளிகை வரை, இலை, தழை முதல் இழையமைந்த ஆடை வரை தீப்பந்தம் முதல் காந்த விளக்கு வரை, கல்லால் ஆன சம்மட்டி முதல் நவீன ஆலை வரை, நீண்ட பாதை, ஊதுகிற வெறும் குழல் முதல் வீணை வரை–ஏன் ? யாழ் வரை, நீலக்கடலிலே மிதத்தும் கட்டு மரம் முதல் நீராவிக் கப்பல் வரை, அரிவாள் முதல் அரைக்கும் பொறி (Threshing Machine) வரை, வளைந்த குச்சியாலான ஏர் முதல் இயந்திர கலப்பை வரை கைராட்டினம் முதல் இயந்திர நூற்புக் கருவி வரை, கைத்தறி முதல் கனவிற்கும் அப்பாற்பட்ட எழிலமைந்த உருவமும் அற்புத பூவேலைப்பாடும் அமைந்த துணிகளை நெய்யும் நெசவுக் கருவி வரை, மிருகங்களின் தோலின் மீதும், செங்கல் துண்டுகளின் மீதும் வரையப்பட்ட சில பொம்மை உருவங்கள் முதல் அச்சகம்வரை — ஏன் ? நூல் நிலையம் வரை நீண்ட பாதை ! கால் நடையாக செய்தியை எடுத்துச் சென்றவன் முதல் மின்பொறி வரை, கல்லினால் செய்த கத்தி, கருவிகள் முதல் எஃகு

ஆயுதங்கள் வரை, நீண்ட பாதை ! மணற் கண்ணுடி முதல் தொலை நோக்காடி (Telescope) வரை, எதிரொலி முதல் போனுகிராப் (Phonograph) வரை, ஜீவனுள்ள பேச்சுக்களின் ஒலிகளை வரையப்பட்டுள்ள கோடு களிலே புதைத்து அடக்கி, பின்னர் மாண்டுபோன அதே குரலையும் மொழிகளையும் மீண்டும் பேச வைக்கும் போனுகிராப் வரை நீண்ட பாதை ! தம்பட்டம் முதல் டெலிபோன் வரை — எண்ணங்களின் விரைவு அவ்வளவு வேகமாக வார்த்தைகளை எடுத்துச் சென்று, கேட்பவர் செவிகளிலே வார்த்த ஞாணயங்களின் கணீர், கணீர் என்ற ஒலிபோல மொழிகளை உதிர்க்கும் டெலிபோன் வரை, மரப் பாலம் முதல் தொங்கு பாலம் வரை, வனமிருகங்களின் வரண்டுபோன நரம்பு, எலும்பு முதல் எஃகுக் கம்பிகள் வரை. சாதாரண துடுப்பு முதல் சுழலும் விசைத் துடுப்பு வரை. ஒண்டி வில் முதல் துப்பாக்கி வரை. சிறு கவண் முதல் பெரும் பீரங்கிவரை நீண்ட பாதை ! காட்டு வாழ்வு முதல் சட்டமமைந்த சமூகம் வரை. சிறு குழு முதல் பாராளுமன்றம் வரை, அடிமைத்தனம் முதல் விடுதலை வரை, தோற்றம் முதல் உண்மை வரை, பயம் முதல் பகுத்தறிவு வரை நீண்ட பாதை !

ஆனல் இவ்வளவு தூரமமைந்த பாதையில் மனித சமுதாயமே பயணம் செய்துள்ளது. எண்ணிறந்த தடைகள் சமாளிக்கப்பட்டுள்ளன. கணக்கற்ற பகைவர்களை மண்டியிடச் செய்துள்ளது. ஆயிரம் ஆயிரம் வெற்றி மாலைகள் நியாயத்திற்காகவும் உரிமைக் காகவும் சூடப்பட்டுள்ளன. பல லட்சம் மக்கள்

மனித சமுதாயத்திற்காக வாழ்ந்துள்ளனர்; உழைத்துள்ளனர்; உயிரையும் ஈந்துள்ளனர்!

நான் இன்று அநுபவிக்கிற இன்ப வாழ்வுக்கு, அடைந்துள்ள வாழ்க்கை வசதிக்கு நிச்சயமாய் நன்றியுடையவர்களாய் இருக்கவேண்டும். நமது இதயங்கள் நன்றியறியதலால் மலரவேண்டும்.

யாருக்கு, எதற்கு, நன்றி தெரிவிக்க வேண்டும்?

நேர்மையுடனும், பரந்த மனோபாவத்துடனும் சிந்திப்போம்.

ஆலயங்களுக்கு நமது நன்றியை தெரிவிக்கலாமா?

1500 ஆண்டுகள் வரை, கிருஸ்துவ உலகம் முழுவதும் கிறிஸ்துவ மதத்தின் குடைக் கீழ்இருந்திருக்கிறது.

இந்த இவ்வளவு நூற்றாண்டுகளில் நமது வைதீக ஆலயங்கள் மன்பதையின் நன்மைக்காக செய்தது என்ன?

இந்த வாழ்வில் மனிதனது தேவைகள் உணவு. உடை, உறைவிடம், கடும்குளிர், கொடும்வெயில், பனி, புயல் இவைகளிலிருந்து மனிதன் காப்பாற்றப்பட வேண்டும். நாளைக்கு வேண்டியதைப் பற்றி சிந்தனை செய்தாகவேண்டும். வாலிபம் என்கிற வசந்தத்தில் வயோதிக பருவமாகிய மாரிகாலத்துக்கு தயார் செய்து கொள்ள வேண்டும். நோய்களின் காரணங்களையும் ஆரோக்கிய வாழ்வின் அம்சங்களையும் கொஞ்சமாயினும்

அறிந்திருக்க வேண்டும். முடியுமானால் வேதனையை ஒட்டவும், ஆனந்தத்தை ஈட்டவும், ஆயுளை நீட்டவும் வேண்டும். உடலின் தேவைகளை பூர்த்திசெய்து மூளையின் அறிவுப்பசிக்கு தீனியிட வேண்டும்.

ஆலயங்கள் செய்த நன்மை என்ன ?

நிலத்தை பயிரிட, வீடுகளைக்கட்ட, துணிகளை நெய்ய, நோய்களைத் தடுக்க, அல்லது குணப்படுத்த, கப்பல்களைக்கட்ட, கடற் பயணம் செய்ய, வருத்தத்தை ஒட்ட அல்லது வாழ்வை நீட்ட மனிதர்களுக்கு கற்பித்ததா ?

கிருஸ்துவோ அல்லது அவரின் தூதுவர்களோ பயனுள்ள அறிவுச் செல்வதற்கு ஏதாவது உதவியுள்ளனரா ? எந்தக் கலையைப் பற்றியாவது, விஞ்ஞானத்தைப் பற்றியாவது அவர்கள் ஒருவார்த்தை சொன்னதுண்டா ? அவர்களைப் பின்பற்றுபவர்களுக்கு, வாழ்வதெப்படி, இயற்கையின் தடைகளை சமாளிப்பதெப்படி, வியாதிகளைத் தடுப்பதெப்படி, பஞ்சம், வறுமை, வாட்டம், வேதனை இவைகளிலிருந்து காப்பாற்றிக் கொள்வதெப்படி என்பதைப் பற்றி போதனை புரிந்ததுண்டா ?

இயற்கையின் கூறுகளில் ஏதாவதொன்றைப் பற்றி, மனிதனின் வாழ்வை பாதிக்கும் ஏதாவது உண்மைகளைப் பற்றி விளக்கினர்களா ? ஆராய்ச்சி, படிப்பு, சிந்தனை இவைபற்றி ஏதாவது கூறினரா ? தன்னம்பிக்கை,

உழைப்பு, முயற்சி, ஆகியவற்றின் தாரக மந்திரத்தை உபதேசித்தனரா? எந்த விவசாயியோ அல்லது விஞ்ஞானியோ புதிய விவலிய நூலிலே உபயோககரமான ஏதாவதொரு உண்மையைக் காணமுடியுமா? நில நூல் ஆராய்ச்சிக்காரனுக்கோ, வானநூல் வல்லுநனுக்கோ, உடற்கூறு அறிஞனுக்கோ, மருத்துவனுக்கோ, புத்தம் புதியவைகளைக் கண்டுபிடிப்பவனுக்கோ, உண்டுபண்ணுபவனுக்கோ உதவி புரிகிற ஏதாவது ஒன்று புண்ணிய ஏட்டிலே உண்டா?

•

ஆலயங்கள் சாதித்ததென்ன?

அடிநாள் முதலே அழியுந் தன்மையைப் பற்றியும், அவனியிலுள்ள பொருள்களின் அநித்தியத்தைப்பற்றியும் போதனை செய்தது. செல்வத்தின் சிறுமையையும் வறுமையின் பெறுமையையும் பேசியது. மரணத்திற்கு தயார் செய்துகொள்வதே இவ்வுலகில் நமது வேலை என உபதேசித்தது. மோட்சம்பெற குறிப்பிட்ட நம்பிக்கை தேவை என வற்புறுத்தியது நம்ப மறுத்தவர்களோ அல்லது கொஞ்சம் சந்தேகித்தவர்களோ நீங்காத துயரில் உழல்வர் எனக் கூறியது. ஆலயங்களின் கருத்துப்படி இயற்கை ஆவல்கள், ஆசைகள், உணர்ச்சிகள் அத்தனையும் கேவலமானவை; கீழ்த்தரமானவை.

ஆண்டவனை நேசிப்பது, ஆசையை அடக்குவது பொன்னை இகழுவது, புகழை வெறுப்பது, தன்னலத்தை அறுப்பது, மனைவி, மக்களை துறப்பது, கந்த மூலத்தை புசிப்பது, பாராயணப் பாடல்களைப்

பஜிப்பது, கந்தல், காவியுடைகளே மாட்டுவது, காதலே இருதயத்திலேயிருந்து ஒட்டுவது — இவைதான் பல நூற்றாண்டுகளாக உயர்ந்த, உன்னதமான, மாசற்ற பண்புகள். இவற்றைப் பின்பற்றியவர்களே குருமார்கள்.

மதகுருமார்கள் மற்ற மக்கட்கு உதவி செய்யவில்லே. ஆனால் மற்ற மக்கள் மதகுருமார்களுக்கு உதவினர். மதகுருக்கள் மற்றவருக்காக உழைக்கவில்லே. அவர்கள் கேவலம் பிச்சைக்காரர்கள்! பிறர் உழைப்பை உறிஞ்சி உண்டுகொழுத்த அட்டைகள். அவர்கள், பாவம், பைத்தியக்காரர்கள்! கர்த்தரின் போதனையை பின்பற்றினர். எதிர்காலத்தைப் பற்றிய எண்ணம் அவர்கள் இதயத்திலே நடமாடவில்லே. அவர்கள் உடல்களின் அங்கங்களேப் பங்கப்படுத்திக் கெண்டனர். மேனியிலே சூடுகள் போட்டுக்கொண்டனர். இன்னெரு உலகத்தில் அநுபவிக்கப்போகும் இன்பத்திற்காக இங்கே தங்கள் மூளேயை அழித்துக் கொண்டனர். வாழ்வுப் பயண நேரத்திலே புதைகுழியிலே தங்கள் கண்களே செலுத்திக்கொண்டிருந்தனர். வாழ்வுப் பாதையிலேயுள்ள வண்ண மலர்களே அவர்கள் சேகரிக்கவில்லே. பச்சைப் பசும் புற்றரையை விலக்கினர்கள். பாதையிலேயுள்ள பாழான புழுதிவழியே நடந்தார்கள். அவர்கள் புலம்பல்தான் அவர்கள் கேட்க விரும்பிய இன்னிசை. சலசலவென ஓடும் சிற்ருறுகளின் சிந்து, புள்ளினங்களின் மதுர கீதம், குழந்தைகளின் கலகலவென்ற சிரிப்பொலி — இவைகளெல்லாம் அவர்கள் இருதயத்தைத் தொடாதவை. மகிழ்ச்சி பாவத்தின் மதலே யெனவும், மகிழ்ச்சிப்

பெருக்கிலே திளைப்பவர்களுக்கு மனமாறுதல் தேவை யெனவும் கருதினர். அவர்கள் பாவமற்றவர்கள்; ஆனால் பரிதாபத்திற்குரியவர்கள். எனினும் தங்கள் கொள்கை களை மனதார நம்பினர்: மாசற்றவராய் இருந்தனர். மறுலோகத்தை நோக்கி தொங்கிக்கொண்டிருந்தனர்.

ஆலயங்கள் சாதித்ததென்ன ?

ஆலயம் அந்தஸ்தையும் ஆடம்பர வாழ்க்கையும் துறக்கச் செய்தது. எவ்வெப்பொருள்கள் வாழ்வை அலங்காரப்படுத்தி வளமாக்குகிறதோ அவைகளை — ஐம்புலன்களால் வரும் ஆனந்த சாகரத்தை, காதலின் கனிவை, இதயத்தின் இன்பத்துளிகளை, மனிவி மக்களின் அன்பான அணைப்பை, ஆசை முத்தங்களைத் துறக்கச் செய்தது.

இவ்வளவும் செய்தது ஆலயம். காரணம் இவ்வுலக வாழ்வையே பாரமார்த்திகத்தில் பயிற்சிபெற, இயற்கை இச்சைகளை வெல்ல, இறைவனிடம் ஆசைகளை வைக்க, இன்ப உணர்ச்சிகளை மாய்க்க, 'உடற் பசி'யை அடக்க, இரத்தத்தை உறைய வைத்துக் கொள்ள, கற்பனை இறக்கைகளுக்கு கட்டுப் போட, உலகைப் பொறுத்தவரையில் உயிரற்ற பிணங்களாக ஆக்கிக்கொள்ள தயார் செய்து கொள்ளும் தருணமாக, தற்காலிக இடைவேளையாகக் கருதினர். ஏனென்றால் ஆண்டவன் சன்னிதானத்தில் தோன்றும்போது அவன் எப்படி படைத்தானோ அதற்கு நேர்மாறாக சகல அம்சங்களிலும் இருக்கவேண்டும் என எண்ணினர்.

ஆலயங்கள் சாதித்ததென்ன ?

ஆண்டவனிடமிருந்து தெய்வீக சக்தியை அடைந்திருப்பதாக நடித்தது. மரணத்தின் பாதையையும் மங்காத இன்பத்தின் வழியையும் அறிந்திருப்பதாக நடித்தது. மோட்சம் பெறும் மார்க்கத்தை பக்தி மூலம் போதனை புரிந்தது. இவைகளில் நம்பிக்கையுள்ள வைதீக பக்தர்கள் தேவர்களாவர். சந்தேகிப்போர் சாம்பலாவர் என சங்கநாதம் செய்தது. இதை ஆலயம் அறிந்திருந்தது. எனவே விசாரணை, அறிவு, ஆராய்ச்சி, சிந்தனை ஆகியவற்றின் விரோதியாக, பகை வனாக ஆகியது. ஏன் விசாரணை, ஏன் ஆராய்ச்சி, எதற்காக சிந்தனை செய்கிறீர்கள் ? நீங்கள்தான் அறிந்திருக்கிறீர்களே என்றது ! பார் முழுதும் தன்னிடம் பணிய வைக்க முயன்றது. அதற்காக பலாத்காரத்தை துணைக்கழைத்தது. உறையிலே இருந்து வாளை உறுவியது ; தீக்குண்டங்களில் நெருப்பை மூட்டியது ; இரும்புச் சங்கிலிகளை (கரங்களிலே) மாட்டியது ; சிறைச்சாலைகளைக் கட்டியது ; தூக்குமேடைகளை எழுப்பியது, இவ்வளவுதானா ? இன்னும் எத்தனை, எத்தனையோ வேதனையந்திரங்களை கண்டுபிடித்து உபயோகித்தது. ஆலயங்களினுல் மத பிரிஷ்டம் செய்யப்பட்டோர், நாடு கடத்தப்பட்டோர், அங்கங்கள் பங்கப்படுத்தப்பட்டோர், சிறைச்சாலையிலே போட்டு சித்திரவதை செய்யப்பட்டோர், கண்கள் குருடாக்கப்பட்டோர், செந்தீயிலே கொளுத்தப்பட்டோர், சிலுவையிலே அறையப்பட்டோர், தூக்கிலே மாட்டப்பட்டோர், மனித குலத்திலே ஆயிரம் ஆயிரம்

பேர்கள் ! இந்த மாவீரர்களின் வாழ்வை வதக்கி, வாட்டி அழித்து, ஒழித்தது. அதனுடைய வேதனை விஷம் மனித னுடைய ஒவ்வொரு நாடி நரம்பையும் தொட்டது. துன்பத்தின் எல்லை எவ்வளவுண்டோ அவ்வளவையும் தோற்றுவித்தது. மனிதன் தாங்கிக் கொள்கிற துயரக் கொடுமையையும் தாண்டிச் சென்றது.

தான் எதை உண்மையென்று கூறியதோ, அதைக் காப்பாற்றவும், வேத நிபந்தனையை, விதண்டாவாதத்தை அழிக்கவும். சிலரின் ஆத்மாக்களைக் காப்பாற்றவும் இவை இத்தனையையும் செய்தது. அந்த அளவில் நேர்மையுடையதே ! மூளையின் வளர்ச்சியை கிள்ளி யெறிய, முன்னேற்றத்தின் வேகத்தைத் தடைப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எனவே ஆலயம் தனது முழு ஆற்றலையும் பிரயோகித்தது. மக்களுக்கு சுயமாகவும், சுதந்தரமாகவும் சிந்தனை செய்யவும், அவர் களின் எண்ணங்களை எடுத்து இயம்பவும், உரிமை நல்கியிருந்தால், தங்களுடைய மூளையையும் பிறருடைய மூளையையும் சந்தேகங்களால் நிரப்பியிருப்பார்கள். அப்படி சுயமாக சிந்தனை செய்ய அனுமதிக்கப்பட் டிருந்தால் ஆராய்ச்சி புரிந்திருப்பார்கள், அதன் பயனுய் ஆலயத்தின் கொள்கை, கோட்பாடுகளை மறுத்திருப் பார்கள் ; குருமார்களின் வாசகங்களுக்கு எதிராக மல்லுக்கு நின்றிருப்பார்கள் ; ஆலயத்தையே ஆட்சே பித்திருப்பார்கள். எனவே மத குருக்கள் மக்களைப் பார்த்து கூவினர்கள், "மகாஜனங்களே! ஆண்டவனைப் பற்றி பேசவேண்டியவர்கள் நாங்கள். கேட்கவேண்டிய வர்கள்தான் நீங்கள். உபதேசம் செய்யவேண்டியது

எங்கள் கடமை; அதை உண்மை யென்று நம்ப வேண்டியது உங்கள் கடமை!" என்று.

ஆலயங்கள் சாதித்ததென்ன ?

பல ஆயிரம் மதமன்றங்களும் மதக் குழுக்களும் நடைபெற்றன. ஆயிரம் ஆயிரம் சந்தர்ப்பங்கள் குரு மார்கள் கூடி விவாதித்து குடுமி பிடித்துக்கொண்டுள் ளனர். போப்பாண்டவர்களும், புரோகிதர்களும், அர்ச் சகர்களும் தங்கள் கோட்பாடுகளை விளக்கியுள்ளனர். "புதிய விளக்கம்" சேர்த்துள்ளனர்; மற்றவர் உரிமையை மறுத்துள்ளனர். ஆனால் உபயோபகர மான என்ன உண்மையை கண்டுபிடித்தனர் ? என்ன உண்மையை உணர்த்தினர் ? அவனியின் சிந்தனைச் செல்வத்திற்கு ஏதாவது சேர்த்துள்ளனரா ? அறிவு வளத்தை அதிகரித்துள்ளனரா ?

உணவு உண்டாக்குவதற்கு ஏதாவது உற்பத்தி செய்து காண்பித்தனரா ? அல்லது கண்டுபிடித் தனரா ?

மனிதனின் பசியை அடக்க ஏதாவது உற்பத்தி செய்தனரா ?

மாறுக, பாலஸ்தீனத்திலே வாழ்ந்த குடியானவர் குடும்பத்தைச் சேர்ந்த குமரியை ஆண்டவனின் மாதா எனக் கண்டுபிடித்தனர். இதை ஓர் ஏட்டின் மூலம் நிரூபித்தனர். அந்த ஏட்டை ஆதாரமாக்க, தெய்வீகம் பெற்றது என அழைத்தனர்.

இரசாயனத்தைப்பற்றி, பொருள்களின் சேர்க்கை, பிரிவு, எப்படி என்பது பற்றி, தீயவற்றை விலக்குவது எப்படி, நல்லனவற்றை உற்பத்தி செய்வது எப்படி என்பது பற்றி ஏதாவது கூறினரா? ரொட்டியை, சில அசைவுகளாலும், சில மந்திர முணுமுணுப்புக்களாலும் ஆண்டவனின் சதையாகவும், மதுவை ரத்தமாகவும் மாற்ற முடியும் எனக் கூறினர். கடவுளுக்கு சதையோ, இரத்தமோ கிடையாது. அவன் ஆவி உருவிலே உள்ளவன்: உடலோ, உருப்புக்களோ, உணர்ச்சிகளோ அவனுக்கு இல்லை என்ற உண்மையையும் மறந்து இப்படி கூறினர்.

ஆலயங்கள் சாதித்ததென்ன?

நானிலம், நட்சத்திரங்கள், நாலாவித பொருள்களின் தோற்றம் ஆகியவற்றின் வரலாற்றை நல்கியது. மோசசின் நில நூலையும், ஜோஷுவா, எலிஜா ஆகியோரின் வான நூலையும் போதனை செய்தது. மனிதனது வீழ்ச்சியையும் முடிவையும் உபதேசித்தது. ஒரு யூதக்குடியானவனை (இயேசு) ஆண்டவனென நிரூபித்தது; மோட்ச, நரகங்கள் உண்டு என்ற எண்ணத்தை நிறுவியது.

ஆண்டவனிடமிருந்து தெய்வீக அருள் பெற்றதாக நடித்தது. புண்ணிய ஏட்டில் எல்லா அறிவும் உண்டெனவும், வாழ்வுப் பயணத்திலே மனிதனுக்கு தேவையான அத்தனையும் அதிலே உண்டெனவும் கூறியது, புண்ணிய ஏட்டைத் தவிர மற்றைய ஏடுகள் —கடவுட் காதைகள், பாராயணப் பாடல்கள் தவிர—

மற்றைய ஏடுகள் செல்லாக் காசாய் கருதப்பட்டன. பைபிளை மறுத்து உரைக்கும் ஏடுகள் விஷமத்தன மானவை. பைபிளை ஒத்துக் கொள்பவை வேலையற் றவை. பக்தி, மௌடீகம், குருட்டு நம்பிக்கை, இவைதான் முக்கியத்துவம் பொருந்தியதாய் கருதப் பட்டன. ஆலயம் கூறிற்று, "வேதாந்தம் உருத்திராட் சத்தை உருட்டட்டும். எந்தக் கேள்வியையும் கேட் காதே. கண்ணை மூடிக்கொள். ஆத்மாவைக் காப் பாற்று"—என்று.

ஆலயங்கள் சாதித்ததென்ன?

பல நூற்றாண்டுகள் தரணியை தட்டையாய் வைத்திருந்தது. வான மண்டலம் முழுவதையும் பூமியைச் சுற்றி பிரயாணம் செய்யச் செய்தது. "பல நூற்றாண்டுகள் தெய்வீக" அறிவையே பிடித்துக் கொண்டிருந்தது. உண்மைகளுக்கு எதிராக பூதத் தின் கோரத்தன்மையுடனே போரிட்டது. பல நூற் றாண்டுகள் உபயோககரமானவற்றை வெறுத்தது. மருந்து முறைகளின் பரம விரோதி ஆலயம். நோய் நொடிகள் பேய் பிசாசுகளால் உண்டாகிறது. புரோ கிதர்களாலும், புண்ணிய தீர்த்தத்தாலும், உலர்ந்த எலும்பாலும் குணப்படுத்தலாம். அப்படியிருக்க டாக்டர் என்பவர்கள் புரோகிதர்களின் போட்டிக் காரர்கள். அவர்கள் வருமானத்தைத் தட்டிப் பறிக்க வந்தவர்கள் எனக் கூறியது.

ஆலயம் உடலைக் கூறுபடுத்தும் முறையை எதிர்த் தது. பிணங்களைப் பிளந்து பார்க்கக் கூடாது என்றது.

மனிதனுக்கு நோயைக் குணப்படுத்த உரிமையில்லை. ஆண்டவன் புரோகிதர் மூலம் அதைச் செய்வான் என நம்பியது.

நோயைத் தடுக்க மனிதனுக்கு உரிமை கிடையாது நோய்கள் ஆண்டவனால் தண்டனையாக அனுப்பப் பட்டவை என எண்ணியது.

அம்மை குத்துதல், ஊசி போடுதல், க்ளோரோபாரம் முறை ஆகியவைகளை எதிர்த்தது. தாய்த் தன்மையை ஓர் பெண் அழித்துக் கொள்வதை பாவமாக, கொடுங் குற்றமாக பிரகடனப்படுத்தியது. கருணை மிகுந்த ஜெகோவாவின் சாபத்தை பெண் தாங்க வேண்டும் எனக்கூறியது.

ஆலயங்கள் சாதித்ததென்ன ?

புத்தி குழம்பியுள்ள பைத்தியக்காரர்களிடம் பிசாசு குடி புகுந்திருக்கிறது என போதனை புரிந்தது. சித்தப் பிரமை வியாதியல்ல, என எண்ணியது. வேதாளங் களால் வந்த வினை என நினைத்தது, இவைகளை பூஜை, காணிக்கைகளாலும், பில்லி, சூனியத்தாலும் குணப் படுத்தலாம் என நம்பியது. இவைகளுக்காக ஆலயங் களுக்கு ஏராளமாக வழங்க வேண்டும். இது தேவா லயங்களை செல்வக் களஞ்சியமாக்கியது. இந்த எண் ணங்களை கத்தோலிக்கர் மட்டும் கொண்டிருக்கவில்லை புகழ்பெற்ற புராடஸ்டண்டுகளான லூதர், கால்வின், நாக்ஸ், வெஸ்லி போன்றோரும் கொண்டிருந்தனர்.

ஆலயங்கள் சாதித்ததென்ன?

பித்தமான கோட்பாடான பில்லி, சூனிய முறையை போதித்தது. இருட்டிலே வேதாளத்தையும், காற்றிலே பேய், பிசாசுகளையும் உலகிலே வேதனையையும் வெட்கத்தையும் சிரப்பியது. ஆடவர், பெண்டிர், குழந்தைகள் ஆகிய சகலரையும் சாத்தானிடம் சகவாசம் கொண்டிருப்பவர்கள் மற்ற மனிதரைத் துன்புறுத்த எனக் குற்றஞ் சாட்டியது. வயோதிகப் பெண்கள் பலர், கடலிலே கடும் புயலை வரவழைத்ததாக, வந்த மழையைத் தடுத்ததாக, வாட்டுகின்ற மூடுபனியை கொண்டு வந்ததாக குற்றஞ் சாட்டப்பட்டு தண்டிக்கப்பட்டுள்ளனர். வாலிப வனிதையரில் பலர் தங்களை ஓநாய்களாக, பாம்புகளாக மாற்றியதற்குத் தண்டிக்கப்பட்டுள்ளனர். இந்த சூன்யக்காரிகள், நோய் நொடிகளை உண்டுபண்ணியதற்காக, மனசாட்சியை விலை கூறியதற்காக, மதுவிலே புளிப்பை உண்டுபண்ணியதற்காக, சுடுகின்ற நெருப்பிலேயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளனர். இவைகள் அத்தனையும் ஆண்டவனின் சாது பக்தர்களை பழிவாங்க பேய்களின் உதவியால் செய்யப்பட்ட செயல்கள் என எண்ணினர். ஆலயங்களுக்கு மாசுகற்பிக்க வேண்டுமென்பதற்காக சைத்தான் பல வழிகளிலும் முயன்றது. சில நேரங்களில் புரோகிதர் வேடம் புனைந்து குற்றங்கள் பல புரிந்தன. உதாரணமாக, ஒரு நேரத்திலே ஓர் பாதிரியார் மாதிரி வேடம் புனைந்தது. அந்தப் பாதிரியோ ஒழுக்கத்தின் உறைவிடம், தூய்மையின் சின்னம். அவர் ஓர் நாள்

வசிகரமான விதவையின் அணைப்பிலே அவள் அறையி லேயே கண்டு பிடிக்கப்பட்டு இழுத்து வரப்பட்டார். அ ச ல் பாதிரியின் தோற்றமும் சாயலும் அப்படியே அமைக்திருந்ததால் அவரிடம் நெருங்கிப் பழகிய பலர் கூட அவரே என எண்ணி ஏமாந்தனர். அவ்வளவேன்? அந்த விதவையே தனது ஆ சை நாயகன் அருமைப் பாதிரியே என எண்ணினள். இவ்வளவும் புனிதாத்மாக் கள் மீது பழி கற்பிக்க பேய், பிசாசுகள் எடுத்தநடவடிக் கைகள்.

• இதுபோல் நூற்றுக்கணக்கான எடுத்துக்காட்டு கள் காட்டலாம். காரணம் இந்த வேதாளங்களுக்கும் வேதியர்களுக்கும் இடையே நடந்த போராட்டம் கடும் போராட்டம்; கசப்பான போராட்டம்.

இ ந் த போப்பாண்டவர்களும், புரோகிதர்களும் மதகுருக்களும் கபட வேஷதாரிகளல்ல. புதிய விவலிய நூலை, ஏசுவின் போதனையை நம்பினர். பேய் பிசாசுகளை அழிப்பது கர்த்தரின் நீங்காத் தொழில் என அறிந்திருந் தனர்.

ஆலயங்கள் சாதித்ததென்ன ?

மனிவியை அடிமைப்படுத்தியது. கொண்டவனின் சொத்தாகச் செய்தது. கர்த்தர் எப்படி கணவனுக்கு மேல் இருக்கிறாரோ அப்படியே மனையாளுக்கு மேல் மணவாளன் என்ற மரியாதை இடத்தை ஆணுக்கு அளித்தது. ஓர் துறவிப்பெண் (Nun)– சந்நியாசினி தாய் மார்களைவிட தூய்மையானவள். உயர்ந்தவள் என உபதேசித்தனர். பலஇலட்சக்கணக்கான தூய்மையான

இருதயம் படைத்த இளங்கன்னிகளே வாழ்வின் சுகத்தைக் துறக்குமாறும் பிரேதத்திற்கு சூடும் ஆடைகளே அணியுமாறும் வற்புத்தியது. அவர்கள் அத்தனே பேரையும் ஏசுவின் மணப்பெண் என நம்பும்படி செய்தது.

என்னைப் பொறுத்த வரையில் 1800 ஆண்டுகளுக்கு முன்பு மாண்டுபோனமனிதனின் மணப்பெண்ணய்இருப்பதைக் காட்டிலும் விதவையாய் இருப்பதையே விரும்புவேன்.

இத்தகைய பொய்மைக் கருத்துக்களே கொண்ட பேதைப் பெண்கள். சில அதிசயமான வழியில் ஆண்டவனிடம் திருமண உறவுடன் ஐக்கியமாகி இருப்பதாகவும் கற்பனே செய்தனர். உலக பாசங்கள் அத்தனையையும் உள்ளத்திலிருந்து ஓட்டினர். அவர்கள் வாழ்வை உபவாசத்திலும், தொழுகையிலும், வெறுப்புத் துறவிலும் நிரப்பினர். சொந்த மாதாபிதாக்களே மறந்தனர். கண்ணுக்குத் தெரியாத ஒன்றிடம் தங்கள் காதலே செலுத்தினர். அவர்கள் மூடநம்பிக்கையால் தண்டனையடைந்தோர்; பழமையின் பலிக்கடாக்கள், ஆண்டவனின் சிறைச்சாலேயின் ஆயுட் கைதிகள். அவர்கள் நல்லவர்கள். உண்மையானவர்கள். இருதயம் படைத்தவர்கள். ஆனல், மடமை நிறைந்தவர்கள்.

இந்த அன்பு மகளிர் தங்களது இதயத்தை மற்ற உருவமற்ற கற்பனேக்கு அர்பணித்தனர். அவர்களது வாழ்வை வெறுங் கனவுக்கு அடகு வைத்தனர்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் ஓர் அழகிய மாது மதமாற்றம், ''ஞானஸ்நானம்'' செய்யப்பட்டாள்.

அவளது ஆவேசத்தில் " கிறிஸ்துவை மணந்து கொண்டேன் கிறிஸ்துவை மணந்து கொண்டேன் " என்று கூச்சலிட்டாள். அவளது மெய்மறந்த நிலையிலே அந்த பாவை பக்கத்திலிருந்த முதியவரின் கழுத்திலே அவள் கரங்களைச் சுற்றிக்கொண்டு மீண்டும் நான் " கிறிஸ்துவை மணந்து கொண்டேன் எனக் கத்தினாள். அந்த வயோதிகரோ வரட்டுக் கடவுள் கொள்கையில் நம்பிக்கையில்லாதவர். மெதுவாக அவளது கரங்களை விலக்கிக் கொண்டே, அம்மணி, உனது மணவாளனைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. ஆனால் உன் மாமனாரிடம் எனக்கு மட்டற்ற மரியாதை உண்டு " எனக் கூறினார்.

புரோகிதர்களும் மதவாதிகளும் மாதரின் இளகிய இருதயத்தை, மென்மைத்தன்மையை பயன்படுத்தியுள்ளனர். அபலைப்பெண்களின் அச்சங்களின் மீதும், நம்பிக்கைகளின் மீதும் கொழுத்துள்ளனர். அட்டைகளைப்போல அவர்களது இரத்தத்தை உறிஞ்சியுள்ளனர். பாரிலுள்ள பாவங்கள் அத்தனைக்கும் பாவையரே பொறுப்பு என்றனர். அவர்களுக்கு அடிமைப் பண்புகளாகிய கூச்சத்தையும் இழிவுத் தன்மையையும், தாழ்வு மனோபாவத்தையும் உபதேசித்தனர். அற்புதங்களும், அறியாமைகளும், அபத்தங்களுமே அவர்களுக்கு அளித்த அறிவுத்தீனி. உண்மைக்கும் ஊரார் நம்புவதற்கும், நம்பிக்கைக்கும், நடைமுறைக்கும் இடையே உள்ள தொடர்பு தெரியமுடியாத அளவுக்கு அறிவை மழுங்கடித்து மூளையைக் குழப்ப முயன்றனர்.

ஆலயங்கள் சாதித்தென்ன ?

வாணிபம், வியாபாரம் இவைகளின் வைரியாக விரோதியாக இருந்தது. பணத்திற்கு வட்டிவாங்கும் முறையை பகிஷ்கரித்தது. பணத்திற்கு வட்டி கொடுக்காமல் முன்னேற்றம் என்பது முடியாத காரியம், நீராவிக்கப்பல்கள், பெரிய பெரிய இயந்திர ஆலைகள், இருப்புப் பாதைகள் — இவைகள் அத்தனையும் கடனுகப் பெற்ற பணத்தினுல் - அதாவது வட்டி வழங்கப்படும் என்று உறுதிதரப்படும், ஒரு அளவு கொடுக்கப்படும் பெற்ற பணத்தினுல்தான் கட்டப்பட்டவை.

ஆலயம் எல்லாவகை இன்ஷ்யூரன்ஸ் (காப்புறுதி) முறைக்கும் எதிராக இருத்தது. இன்ஷ்யூரன்ஸ் முறையே—அது எந்த உருவிலாகட்டும் அது ஓர் சூதாட்டமாக, ஒழுக்கக்கேடான செயலாக வெறுத்தது. உங்கள் வாழ்வை இன்ஷ்யூர் செய்வதென்பது உங்களுக்கு ஆண்டவனிடம் நம்பிக்கையில்லை என்பதைப் பிரகடனப்படுத்துவது, அதாவது கடவுள் காப்பாற்றுவார் என்று நம்புவதற்குப் பதிலாக ஓர் கழகம் காப்பாற்றும் என்று நம்புபவர்கள் எனக் கருதியது. தாலியிழந்ததையலையும், தந்தையை இழந்த சேய்களையும் "தயாபரன்" காப்பாற்றுவார் என தம்பட்டமடிக்கப்பட்டது.

உங்கள் வாழ்வை இன்ஷ்யூர் செய்வது ஆண்டவனை அமரர் உலகை இழிவு படுத்துவது என அறைகூவியது.

ஆலயங்கள் சாதித்ததென்ன ?

தேவாலயம் தொத்து நோய்கள் தூய ஆண்டவன் அனுப்பிய தூதுவர்கள் எனக் கருதியது. அனைத் துயர்க்கும் தந்தையாகிய "அப்பனுல்" அனுப்பப் பட்டது கருஞ்சாவு; அவனது கருணை சிலரைக் காத்தது, அவனது நீதி மற்றவர் உயிரை மாய்த்தது என எண்ணியது. இந்தப் பீடையை ஒழிக்க முழங் காலில் தண்டனிட்டும் தலை சாய்த்தும், பஜனையாலும் பாராயணத்தாலும், சூடம், சாம்பிராணி போட்டும், ஆது செய்கிறேன், இது செய்கிறேன் என்று நேர்ந்து கொண்டும் இறைவனின் இதயத்தை இளகவைக்க எத்தனித்தனர். காரணம் எதுவோ அதைக்கண்டு நிவர்த்திக்க முயலவில்லை. மாறுக கடவுளே காரணம் என நம்பினர். அவர்கள் சுத்தமான (Pure) நீரைக் கேட்கவில்லை ஆனல் புண்ணிய தீர்த்தத்தைக் (Holy water) கேட்டனர். நம்பிக்கையும் நாசகாரமும் இணைந்து வாழ்ந்தது அல்லது இறந்து விட்டது என லாம். மார்க்கமும் மடமையும், தூய்மையும் கபடமும் தோழமை பூண்டன. வைதிகம் தனது முழு வீரியத்தைச் செலுத்தியது.

ஆலயங்கள் சாதித்ததென்ன ?

கலையும் இலக்கியமும் அதன் பகைவர்கள். ரோம் நாட்டிலும், கிரேக்க மண்டலத்திலுள்ள சலவைக்கல் கட்டிடங்களை யெல்லாம் நாசப்படுத்தியது. அழகை அழிவாய்க் கருதியது. உலகிலேயுள்ள உன்னத இலக்கியச் செல்வங்களை எவ்வளவு சின்னபின்னப்

படுத்தமுடியுமோ அவ்வளவும் செய்தது. புதிய சிந்தனைகளைக் கண்டு அஞ்சியது. ஆனல் மடமை நிறைந்த மத குருக்களின் கிறல்களை, பாதிரிமார்களின் பொய்மை உறைகளை, போப்பாண்டவரின் கட்டளைகளை, உலர்ந்த இரத்தமும், உதிர்ந்த மயிரும், எலும்புத் துண்டும் மரக்கட்டையும், ஆணியும் முள்ளும், கைக்குட்டையும் கந்தல் துணியும், கமண்டலமும் ஜெபமாலையும் சாதித்த அற்புதங்களின் வரலாறுகளை கவனமாய்க் காப்பாற்றியது.

இதுதான் ஆலயங்களின் மகத்தான இலக்கிய 'களஞ்சியம்' இந்த புரோகிதர்கள் நேர்மையானவர்கள் என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனல் எவ்வளவு அறியாமை உடையவர்களோ அவ்வளவு நேர்மையான வர்கள். அதற்குமேல் ஒன்றும் சொல்லுவதற்கில்லை.

ஆலயங்கள் சாதித்ததென்ன ?

கிறிஸ்துவ மார்க்கம் புத்தி சுவாதீனம் இழந்தோருக்கு பல மருத்துவ மனைகளை நிறுவியதாக பூரிப்புடனும் பெருமையுடனும் உரிமை பாராட்டுகிறது. பைத்தியக்காரர்களாய் பாயின் உறைவிடமாக, இல்லமாக கருதியது. அணு அணுவாகச் சித்திரவதை செய்து ஆவியைப் போக்கினர். கை, கால்களிலே விலங்குகளை மாட்டி, ஆடு மாடுகளென அடைத்தனர். பலரை பட்டினிபோட்டு, பசியால் மாளச் செய்தனர். இந்த மருத்துவ விடுதிகள்—சிறைச்சாலைகள் : இருட்டறைகள், அங்கு அடைக்கப்பட்ட பைத்யக்காரர்

களோ அவற்றின் பலிக் கடாக்கள். அதன் காவலர் களோ கனிவுள்ளம் படைத்தவர்கள். கண்ணியமான போக்கினர். ஆனால் கருத்தற்றவர்கள். அவர்கள் மனிதர்களுக்கு உதவி செய்ய முயலவில்லை. ஆனால் பேய் பிசாசுகளுடன் உக்கிரமான போர் விளைவிப்பதில், வேதாளங்களை அழிப்பதில் ஈடுபட்டிருந்தனர். அவர் களின் செயலுக்கு அன்பு காரணமல்ல; அச்சமும் அருவெறுப்புமே காரணம்.

ஆலயங்கள் சாதித்ததென்ன ?

பல பள்ளிகளை நிறுவின. எப்போர்ப்பட்ட பள்ளி கள் என்றால் விஞ்ஞானத்தை வெறுத்தொதுக்கிய பள்ளிகள்; தத்துவ சாஸ்திரத்தை தகாதெனத் தள்ளிய பள்ளிகள்; வெறும் புரோகிதர்களை மட்டும் தயார் செய்த பள்ளிகள், அங்கே அவர்களுக்கு ''சந்தேகங்கள் சைத்தானின் யோசனை என எண்ணு. ஆராய்ந்து பார்க்கிற பகுத்தறிவை வெறு,'' என உபதேசம் செய்த பள்ளிகள்; மூளையைக் குழப்பி, இருதயத்தை இரும்பு போல கெட்டியாக்கிய பள்ளிகள்: பொய் புரட்டுகள் புனிதமானதாகவும் உண்மை உதவாக்கரை யாகவும் கருதப்பட்ட பள்ளிகள்; அறியாமைச் சாக்கடையை அதிகப்படுத்துவதற்காகவே தோற்று விக்கப்பட்ட பள்ளிகள்: சிந்தனையைத் தடைப்படுத்த, அறிவை அமிழ்த்த அவனியை அடிமை கொள்ள அமைக்கப்பட்ட பள்ளிகள். இந்த விசித்திர பள்ளி களிலே மாணவர்களைக் காட்டிலும் பயிற்றுவிக்கும் ஆசிரியன்மார்கள் அறிவுத் தெளிவு குறைவாக இருந்தனர்.

ஆலயங்கள் சாதித்ததென்ன ?

ஆண்டவனிடம் தனக்கிருந்த ஆதிக்கத்தை கார் மழையைப் பெய்விக்க, வெள்ளத்தை வரவழைக்க, வெள்ளத்தையும் புயலையும் தடுக்க, விஷஜந்துக்களையும் கொடிய விலங்குகளையும் கொல்ல, பரவும் தொத்து நோயையும் பஞ்சத்தையும் நிறுத்த, பனியின் வாடையைத் தணிக்க, மன்னர்கள், மகாராணிகள் ஆயுளை அதிகரிக்க, தலைவர்களைப் பாதுகாக்க, அரசாள்வோருக்கு ஞானம் அருள, காணிக்கை, உண்டியல் தொகைகளை பெருக்க பயன்படுத்தியுள்ளது.

மண நேரத்திலே மகேஸ்வரனை அழைத்தது. மதலைகளுக்கு பெயர் சூட்டும் தருணங்களில் அவை மீது தீர்த்தம் தெளித்தது. மாண்டவர் தலையிலே எண்ணெய் பூசி, இறந்தவருக்காக மந்திரங்கள் ஜபித்தது. பேய், பிசாசு, பூதம், மாயக்காரி, குட்டித் தேவதைகள், குட்டிச் சாத்தான்கள் போன்ற மனிதனின் நெஞ்சிலே நஞ்சூட்டி நாசமாக்கும் தீமைகளிலிருந்து காப்பாற்ற முயன்றது. ஆண்டவனின் சாதுவான ஆட்டு மந்தைக் கூட்டமாகிய மனித குலத்தை விஞ்ஞான ஓநாய்களிடமிருந்தும், ஐயம், ஆராய்ச்சி என்கிற வனவிலங்குகளிடமிருந்தும் காப்பாற்ற முயன்றுள்ளது. ஆண்டவனின் அடியவர் கூட்டத்தை வாழ்வின் ஆனந்தம், இன்பம், சுகம் இவைகளிலிருந்து அப்புறப்படுத்தப் பிரயாசைப் பட்டுள்ளது. தேவாலயத்தின் தத்துவப்படி இங்கு புண்ணியம் செய்தவன் கண்ணீர்விட்டுக் கதறுகிறான். பாவி கலகலவெனச் சிரித்துக் களிக்கிறான். ஆலை

மறுலோகத்தில் இதற்கு நேர் மாறுக புண்ணியவான் பூரிப்புடன் உலாவுவான். பாவி அழிந்து ஒழிவான்.

ஆலயம் பார் முழுவதையும் பக்தியாலும் பாவத்தாலும் நிரப்பியது.

ஆனந்த ஊற்றுக்களைக் களங்கப்படுத்தியது. முட்டாள்தனமான, பொருமை பிடித்த, கொடூரமான, சில நேரங்களில் கருணையுள்ள, சில நேரங்களில் பயங்கரமான, பொதுவாக மடமை நிறைந்த ஓர் ஆண்டவனை அளித்தது. ஆண்டவனுக்கு சம அந்தஸ்து 'உள்ள நயவஞ்சகமும் நரிக்குணமும் கொண்ட பேயையும் கொடுத்தது. ஆண்டவனவ்வளவு வல்லமை இல்லாவிட்டாலும் விரைவுமிக்க, கூர்மை மிக்க பேயை அளித்தது.

நமக்கு இறக்கைகளமைந்த தேவதைகளையும் கந்தர்வ அழகிகளையும், தகதகவென ஒளிரும் தங்கத் தெருக்களும், முத்துக்கதவுகளும் அமைந்த தேவலோகத்தையும் அளித்தது.

நமக்கு வெளவால்கள் போன்ற இறக்கைகளமைந்த பேய், பூதங்களை அளித்தது. மனிதரின் உடம்பிலே புகுந்துகொண்டு அலைக்கழித்த குட்டிச்சாத்தான்களையும் பிசாசுகளையும் அளித்தது. மனிதர்களின் ஆத்மாக்கள் வாட்டப்படுகிற அவியாத நெருப்புக் குண்டங்கள் நிறைந்த நரகத்தை அளித்தது. ஆலயங்களுக்கு நன்றி செலுத்தலாமா? வைதீக, மெதடிக ஆலயங்களுக்கு நன்றி செலுத்தலாமா?

இந்த உலகத்திலே சிருஷ்டித்திருக்கிறதே நரகம் அந்த நரகத்திற்கு நன்றி செலுத்துவதா? எதிர்

காலத்தில் மேல் லோகத்தில் வைத்திருக்கிறதே — அந்த நரகத்திற்காக நன்றி செலுத்துவதா ?

2

ஆலயங்கள் நிருவப்பட்டன, ஆண்டவனுல் ரட்சிக்கப்பட்டன, போப்பாண்டவர்கள், மதகுருக்கள், பாதிரிமார்கள், புரோகிதர்கள் ஆகிய அனைவரும் எல்லையற்ற இரக்கத்தினுல் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆசீர்வதிக்கப்பட்டு, ஞானம் பெற்றவர்கள், புனித ஏடுகள் என்பவை அவனது அருள் பெற்றவை வைதீக கோட்பாடுகள் யாவும் அவனுல் உண்டாக்கப் பட்டவை என்பதை நாம் நினைவிலே வைக்கவேண்டும்.

புனித ஆவியால் நிரப்பப்பட்டோர், என்ன சாதித் தார்கள் என்பது நமக்குத் தெரியும். அவர்கள் நடித்த நாடகத்தின் பகுதியும் நமக்குத் தெரியும். அவர்கள் அழித்த உலகங்களையும், காப்பாற்றிய ஆவிகளையும் நாம் அறிவோம். அவர்கள் அளித்த ஆறுதல், இழைத்த கொடுமைகள், மறுத்துரைத்த உண்மைகள், புகன்ற பொய்மைகள் ஆகியவை நமக்குத் தெரியும். பிரம்மச்சாரியம்தான் பண்புகளிலே தலை சிறந்தது, பெண்டிர் சதா உணர்ச்சியைத் தூண்டும் உருவங்கள், உண்மையான தூய தன்மைக்கு பகைவர்கள், தந்தையர்களைவிட பாதிரிகளும் புரோகிதர்களும் மேலானவர்கள், சொந்தத் தாய்மார்களைவிட துறவிப் பெண்கள் (Nuns) தூயவர்கள் என்ற கருத்துக்களை பல்லாயிரவர் நம்பும்படி செய்தனர் என்பதை நாம்

அறிவோம். ஆண்டவன் பாலஸ்தீனத்திலுள்ள தச்சு வேலைக்காரனிடம் தொழில் செய்தான் என்று கூறுகிற விவிலிய நூலின் வீணுரையை போதனை செய்தனர் என்பது நமக்குத் தெரியும். அறிவை புனிதமானது என்றும் பாவம் நிறைந்தது என்றும் இரு கூறுகளாக்கினர், அருள் பெற்றவை ஆஸ்திகமானது, ஆராயும் அறிவு நாஸ்திகமானது, நம்பிக்கை நல்லது, உண்மை உதவாக்கரை, ஆதாரமும் ஏவலும் செய்த பாவத்தின் விளைவுதான் உலகில் நோக்காட்டையும், சாக்காட்டையும், துன்பத்தையும், துயரத்தையும் கொண்டுவந்தன என்று உபதேசம் செய்தனர் என்பது நமக்குத்தெரியும். அவனின் ஆணைப்படி எல்லாம் நடக்கின்றன, எல்லா சம்பவங்களும் ஆண்டவனுல் ஒழுங்குபடுத்தப்பட்டு முறைப்படுத்தப்பட்டுள்ளன. அரசர்களுக்கு முடி சூட்டுவதும், சிங்காதானத்திலிருந்து இறக்குவதும், ஆக்குவதும் அழிப்பதும் அவன் வேலை. மனிதனது கடமை அந்த தெய்வீக சக்திக்குப் பணிந்து நடக்கவேண்டியது. அவனுக்கு எவ்வளவு இடுக்கண் இருந்தாலும் கவலை இல்லை. எவ்வளவு துயரம், சோகம், சாவு இருந்தாலும் பரவாயில்லை. இன்னும் அதிக கஷ்டம் வரவில்லையே என்ற மகிழ்ச்சியால் நன்றியறிதலைக் கொட்டவேண்டும் என்று கூறினர் என்பது நமக்குத் தெரியும்.

நான் கூறுவதை அறிந்து கொள்ளுங்கள். தேவாலயங்கள் நாணயக் குறைவானவைகளென்றே மதகுருக்கள் நேர்மையற்றவர்களென்றே நான் கூறவில்லை. நினைக்கவுமில்லை. எல்லா மதங்களும், கோட்பாடுகளும், புரோகிதர்களும் இயற்கையாகவே

உண்டானார்கள் என்பதை ஒத்துக்கொள்கிறேன். இயற்கைக்கு அப்பாற்பட்டதிலே நம்பிக்கையுள்ளவர்களால் சில நன்மைகள் செய்யப்பட்டுள்ளன. காரணம் கடவுளிடத்தும், பூதத்திடமும் அவர்களுக்கு நம்பிக்கை இருந்ததால் அல்ல. ஆனால் அப்படியிருந்தும் சில நன்மைகள் செய்திருக்கிறார்கள். அதை நான் ஒத்துக்கொள்கிறேன். மிக்க மகிழ்ச்சியுடன் ஒத்துக் கொள்கிறேன்.

ஆயிரம் ஆயிரம் மதகுருக்கள், தன்னலத்தை மறுத்தவர்கள், தயாள குணமுடையவர், நேர்மையானவர், ஆடவரையும் பெண்டிரையும் மாசற்றதும் மகோன்னதமானதுமான வாழ்வு வாழ்வதற்கு தூண்டுதல் செய்து தாங்கள் எதை தங்கள் கடமையென்று நம்புகிறார்களோ அதன்படி பணியாற்றுகிறவர்கள் என்பதும் எனக்குத் தெரியும். அது அவர்களின் மதக் கோட்பாட்டின் வீழ்வல்ல. மனிதாபிமானத்தின் வீழ்வு.

நான் என்ன சொல்கிறேனென்றால் பரம்பொருளைப் பற்றி போதனை புரியும் ஒவ்வொரு மதவாதியும், அவனுக்கே தெரியாமல் மானிட சமுதாயத்தின் விரோதியாக இருந்திருக்கிறான்; இருக்கிறான்.

இயற்கைக்கு அப்பாற்பட்டதை நம்புகிற இந்த ஆலயங்களின் தத்துவம் என்ன ?

எல்லா நிலைமைகளுக்கும் அப்பால், எல்லா நிகழ்ச்சிகளுக்கும் அப்பால், எல்லையற்ற பரம் பொருளை வைத்துள்ளனர். அவனது ஆவலினால்

ஆக்குகிறான், அளிக்கிறான், அழிக்கிறான். நானிலம் அவனது நாடகமேடை, மனித குலத்தார் அவன் ஆட்டுவிக்கும் கருவிகள். தேவைகளையும், தெவிட்டாத ஆசைகளையும், இச்சைகளையும் இன்ப எண்ணங்களையும் நம்பிக்கையையும் நடுக்கத்தையும், காதலையும் கசப்பையும் அவர்கள் வாழ்விலே நிரப்புகிறான். ஆனந்த ஊற்றுக்களை தொடுகிறான். வீணையின் நாதத்தை மீட்டுகிறான் விஷ ஜந்துக்களின் கொடுக்குகளால் கொட்டுகிறான். பொறிகளை அமைக்கிறான். பள்ளங்களை வெட்டுகிறான்.

இந்தக் கூத்து ஓர் தொடர் நாடகம்.

அவனது கைப்பாவைகளாகிய இவர்கள் போராடுவதையும் தோல்வியுறுவதையும் கவனிக்கிறான். ஒருவனை ஒருவன் ஏமாற்றுவதை, தன்னையே ஏமாளியாக்குவதையும் கவனிக்கிறான். எல்லாக் குற்றங்களையும் புரியத் தூண்டுகிறான். பிறப்புகளையும் இறப்புகளையும் கவனிக்கிறான்; தொட்டில் அருகே எழும் தாலாட்டுக் கீதத்தையும், சவப்பெட்டியருகே எழும் அழுகை ஓலத்தையும் செவிமடுக்கிறான். இரக்கம் என்பது இறைவனிடம் எள்ளளவும் இல்லை. சலிப்பு சஞ்சலங்கள், தற்கொலை, கோர முடிவுகள் — இவைகளைக்கண்டு குதூகலப்படுகிறான். படுகொலைகள், பயங்கரத் தாக்குதல்கள், விபச்சாரம், நிராதரவான தன்மை, நீக்கப்பட்ட குழந்தைகள் ஆகியவற்றைக் கண்டு புன்னகை புரிகிறான். எளியோர் வதை புரியப் படுவதையும், மதலையைக் கொன்னை கொடுத்த மாதாக்களையும், சிறைக்கம்பிகளுக்குப்பின் நிற்கும்

நிரபராதிகளையும், தூக்குமேடையின் மீது நிற்கும் தூய வர்களையும் பார்க்கிறான். குற்றம் கொலு வீற்றிருப்பதை யும், கபடம் வேஷம் தரித்திருப்பதையும் காண்கிறான்.

மழையை நிறுத்திக்கொள்கிறான். அவனது கைப் பாவைகள் பசியால் துடிக்கின்றனர். பூகம்பத்தின் பெயரால் பூமியைப் பிளக்கிறான்: பலர் விழுங்கப் படுகின்றனர். வெள்ளத்தை அனுப்புகிறான்; பலர் மூழ்கடிக்கப்படுகின்றனர். எரிமலையிலிருந்து நெருப்பைக் கக்குகிறான்; அந்தக் கனலிலே பலர் கருகிச் சாகின்றனர். புயற்காற்றை அனுப்புகிறான்; அதிலே சிக்கி சின்ன பின்ன மடைகின்றனர். இடியின் வேகத்தால் இறப் புடன் மோதுகின்றனர். நீரிலும்காற்றிலும் கண்ணுக்குத் தெரியாத வாழ்வின் வைரிகளே துன்பத்தின் தூதுவர் களை நிரப்புகிறான். அவர்கள் மூச்சு விடும்போதும் நீர் அருந்தும் போதும் கவனிக்கிறான். அவர்களின் சதைகளை யும் நடுக்கும் நரம்புகளையும் உண்டு கொழுக்க கான்சர் (Cancers) வியாதியை உண்டுபண்ணுகிறான். இரத்தக் குழாய்களில் விஷத்தை நிரப்ப பாம்புகளை உண்டுபண்ணு கிறான். அவர்களின் எலும்புகளை நொறுக்கவும் சொட்டுகிற ரத்தத்தை உறுஞ்சவும் வளைந்திர மிருகங் களை உண்டுபண்ணுகிறான்.

சில பரிதாபத்திற்குரியவர்களை பைத்தியக்காரனாக்கு கிறான். அவர்களை, இருளிலே கூசும் கண்களுடனும் கூரிய நகங்களுடனும் தோன்றுகிற பூதங்களாகிய கற்பனையுடன் போராட வைக்கிறான். சிலரை சிந்தனை ஜோதியேயின்றி இருள் செறிந்த வாழ்விலே

திணறவைத்து சீரழிக்கிறான். துயரங்கள், அதிகள், வறுமையின் கந்தலாடை, தேவையின் சுருங்கிய கரங்கள், தாயை இழந்த சேய்கள், அங்கங்கள் பங்கமானோர், குஷ்டரோகிகள் — இவை அத்தனையையும் பார்க்கிறான். புரண்டோடுகிற கண்ணீர் தெரிகிறது. கோவெனக் கதறும் புலம்பல் கேட்கிறது. பளபளவெனப் பிரகாசிக்கும் வாள்கள் தெரிகின்றன. துப்பாக்கியின் வேட்டுச் சத்தம் கேட்கிறது. இரத்தம் தோய்ந்ததால் சிவப்பேறிய போர்க்கலம் — பிணங்களின் வெளுத்துப்போன முகங்கள் தெரிகின்றன. ஆனால் அவர்கள் அஞ்சுகிற நேரத்தில் நையாண்டி புரிகிறான். அவர்களின் ஆபத்தான அழிவு நேரத்தில் நகைத்தே சிரிப்பொலியால் நிரப்புகிறான். இவை அத்தனைக்கும் தப்பி உயிருடன் விடப்பட்ட துர்பாக்கியமான கைப்பாவை முழங்காலிட்டு இருதய சுத்தியாக இந்த தந்திரக்கார எத்தனுக்கு வணக்கம் செலுத்த வேண்டும்.

சொல்லப் போனால் ஆண்டவர்கள் அவர்களுடைய அருமைக் குழந்தைகளைக் காப்பாற்றி ஆதரிக்கவில்லை — அதற்குப் பதிலாக மனிதர்கள் ஆண்டவர்களைக் காப்பாற்றி ஆதரித்துள்ளனர். பல ஆலயங்களைக் கட்டியுள்ளனர். ஆடு, மாடு, குழந்தைகளை பலியிட்டனர். பலிபீடங்களை இரத்த அபிஷேகத்தால் நனைத்தனர். தங்களிடமிருந்த வெள்ளி, தங்கம், வைரம் ஆகியவைகளை வழங்கினர். புரோகிதர்களுக்கு அன்ன ஆகாரமும் ஆடை அணி வகைகளும் அளித்தனர். ஆனால் ஆண்டவர்களோ பிரதி உபகாரம் ஏதும் செய்யவில்லை. இருட்டிலே ஒளிந்துள்ள தெய்வங்கள் அவர்களின் கோரிக்கை

களுக்கு பதிலிருத்தவில்லை. கூக்குரலைசெவிமடுக்கவில்லை. குறிப்பொன்றும் காட்டவில்லை. கரம் கொடுக்கவில்லை. கருணைமொழி யொன்றும் புகலவில்லை. பாராமுகமாய், கேளாத காதாய், செவிடுகளாய், குருடுகளாய், ஊமைகளாய் உன்மத்தம் பிடித்தவர்களாய் தமது சிங்காதனங்களிலே கொலுவீற்றிருந்தன. ஆலயங்களின் கோபுரங்கள் உயர்ந்தன. பிரார்த்தனையின் ஒலிச் சத்தம் அதிகரித்தது. ஆனால் பலன்தான் ஏதும் இல்லை.

தெய்வங்களைத் திருப்திப் படுத்துவதற்காக மனிதன் என்னென்ன செய்துள்ளான் என்பதை எண்ணிப் பாருங்கள். தனது பகுத்தறிவை துறந்துள்ளான். அறிவின் சுடரை அணைத்துக் கொண்டுள்ளான். ஆதாரம் இல்லாமலும் ஆதாரத்திற்கு எதிராகவும் பலவற்றை நம்பியுள்ளான் தன்னையே இழித்தும் பழித்தும் கொண்டுள்ளான். உபவாசங்களும் உண்ணாவிரதப் பட்டினிகளும் இருந்திருக்கிறான் அங்கங்களை பங்கப் படுத்தியுள்ளான் மேனியிலே சூடுகளைப் போட்டுக் கொண்டுள்ளான். குருதியைக்கொட்டியுள்ளான். உடன் பிறந்த மனிதகுலத்தோரை கொலை புரிந்துள்ளான். கொட்டறைகளில் அடைத்துள்ளான். கொடுமை பல புரிந்து அழித்துள்ளான். மனைவி, மக்களைப் பிரிந்திருக்கிறான். அநாதையாக ஆரண்யங்களிலே வாழ்ந்துள்ளான். சூடம், சாம்பிராணிகளால் தூப நைவேத்யம் செய்துகொண்டு, ஜெபமாலையை உருட்டிக் கொண்டு,கமண்டல நீரை மெய்யிலே தெளித்துக் கொண்டு கண்களை மூடிக்கொண்டு, மூழங்கால் தண்டனிட்டு, புழுதியிலே புரண்டு வேண்டியுள்ள

னர். ஆனால் கடவுளர்கள் மௌனிகளாய் — ஊமைகளாய் இருந்தனர் — கற்களைப்போல ஊமைகளாய் இருந்தனர்.

இந்த கூக்குரலும் கோரிக்கைகளும், கொடுமைகளும், குருட்டு நம்பிக்கைகளும் பக்தியும் பைத்தியகாரத்தனமும் தெய்வங்களுக்கு திருப்தியை உண்டு பண்ணியதா ?

நமக்குத் தெரியாது.

வர இருந்த ஏதாவது விபத்து தவிர்க்கப்பட்டதா ? புதிய 'வரப்பிரசாதம்' ஏதாவது கிடைத்ததா ?

நமக்குத் தெரியாது.

இந்த ஆண்டவர்களுக்கு நன்றி செலுத்தலாமா ?

ஆலயங்கள் வழிபடும் ஆண்டவனுக்கு நன்றி செலுத்தலாமா ?

யார் இந்தக் கடவுள் ? என்ன செய்கிறார் இந்தக் கடவுள் ?

பிரபஞ்சத்திலே எவை எவை இருந்தனவோ, எவை எவை இருக்கிறதோ, எவை எவை இருக்குமோ அவைகளை ஆக்கியவன் அவன். காப்பாற்றுபவனும் அவனே. தேவதைகள், பிசாசுகளின் தந்தை அவனே. சொர்க்க நரகங்களை நிர்மானித்தவன் அவனே. உலகை உண்டுபண்ணினான். ஒரு ஆணையும் பெண்ணையும் உலவ விட்டான். அவர்களை வசீகரிக்க ஓர் சர்ப்பத்தை உண்டுபண்ணினான்.

சொந்த விரோதியை சிருஷ்டித்தான். விரோதிக்கு வெற்றி மாலையை வழங்கினான். பிறகு செய்த தவறுக்காக வேதனைப்பட்டான். ஓர் பெருவெள்ளத்தை அனுப்பினான். எட்டுப் பேரை விட்டுவிட்டு மற்றைய மனிதர் யாவரையும் அழித்தான். எஞ்சியிருந்தோரையும் அவர் தம் சிசுக்களையும் நாகரிகப்படுத்த முயன்றான். இந்த ஏற்பாட்டை பூகம்பங்களைக் கொண்டும், 'புஸ்' எனச் சீறும் சர்ப்பங்களைக் கொண்டும், தொத்து நோய் களைக் கொண்டும், பஞ்சத்தைக் கொண்டும் செய்தான். ஆனால் தோல்வியே அடைந்தான். தோல்வியடையவே விரும்பினான். பின்னர் அவனியிலே தோன்றினர். மூன்றாண்டுகள் உபதேசம் செய்தான். சில காட்டு மிராண்டிகள் அவன் உயிரை கொலை செய்ய அனு மதித்தான். பிணங்களிலேயிருந்து எழுந்து சொர்க்க லோகம் சென்றுவிட்டான் என்று அவர்கள் கூறு கிறார்கள்.

அவன் தோல்வியடைந்தான் என்பது அவனுக்குத் தெரியும். அவன் கொல்லப்படுவான் என்பதும் அவனுக்குத் தெரியும். உண்மையிலே அவனே எல்லா ஏற்பாடுகளையும் செய்தான். இப்படி இப்படி இருக்க வேண்டுமென முன்பே முடிவு செய்து கொண்டது போல் ஒவ்வொரு அங்கமாக வரும்படி செய்தான். இவற்றை நம்பியவர்களுடைய ஆத்மா காப்பாற்றப் படும், இவைகளைச் சந்தேகிப்பவர், அல்லது மறுப்பவர் ஆத்மாவை இழந்து தன்புறுவர் எனக்கூறியது.

இந்த கடவுளுக்கு ஏதாவது நல்ல புத்தி உண்டா ?

எப்பொழுதும் இருக்கிறதென்று சொல்லமுடியாது. தனக்கெதிரே சத்துருக்களை உண்டுபண்ணுகிறான். அவர்களை அழிக்க சதிபுரிகிறான். அவனது எண்ணத்திற்கு எதிராக எதுவும் உயிர் வாழமுடியாது. ஆனால் பிசாசுகள் சாவதில்லை, உயிருடன் உலாவுகின்றன.

இந்த கடவுளைப்பற்றி என்ன சொல்லுவது?

சில நேரங்களில் முட்டாள், சில நேரங்களில் கொடுமைக்காரன், சில நேரங்களில் பைத்தியக்காரன்.

உன்மையிலேயே இந்தக் கடவுள் உயிருடன் உண்டா? இயற்கைக்கு அப்பால் ஏதாவது அறிவொளி உண்டா? மாந்தர்களின் மனவருத்தங்களைக் கண்டு இரங்குகின்ற ஏதாவது பிராணி நட்சத்திரப் பந்தலுக்குள் எங்காவது, எந்த இடத்திலாவது உண்டா? நமக்குத் தெரியாது.

இயற்கைக்கு நன்றி செலுத்தலாமா?

இலைகள், புற்கள், பூச்சிகள் இவைகளுக்காக படும் கவலையை விட மனிதராகிய நமக்கு அதிக கவலைப் படுகிறதா?

நாம் இருக்கிறோமென்பதையாவது இயற்கை அறியுமா?

அதுவும் நமக்குத் தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயமாய் நமக்குத் தெரியும். அதுதான் இயற்கை நம்மையெல்லாம் கொலை செய்து சாகடிக்கப் போகிறது என்பது.

இயற்கைக்கு ஏன் நன்றி செலுத்த வேண்டும்?

கதிரொளிக்கும் காரிமழைக்கும் உடலுறுதிக்கும் உவகை வாழ்வதற்கும் கடவுளுக்கோ அல்லது இயற்கைக்கோ நன்றி செலுத்துவதாலல், பஞ்சத்திற்கும், தொத்து வியாதிக்கும், பூகம்பத்திற்கும், புயற் காற்றிற்கும், நோக்காட்டிற்கும், சாக்காட்டிற்கும் யாரை சபிப்பது ?

3

வைதிக ஆலயங்களுக்கு நாம் நன்றி செலுத்த முடியாவிட்டால்—அறிய முடியாத ஒன்றுக்கு நன்றி செலுத்த முடியாவிட்டால்—உணர முடியாத ஒன்றுக்கு நன்றி செலுத்த முடியாவிட்டால்—இயற்கைக்கு நன்றி செலுத்த முடியாவிட்டால்—இயற்கைக்கு அப்பாற் பட்டதற்கு நன்றி செலுத்த முடியாவிட்டால்—ஏதோ ஒரு கற்பனைக்கு தலை வணங்க முடியாவிட்டால்—ஏதோ இருக்கலாமோ என்ற சந்தேகத்திற்கு முழந்தாள் பணிய முடியாவிட்டால்—யாருக்கு நன்றி செலுத்துவது ?

உலக மக்கள்—ஆண்டவன் அருள் பெற்றவர்கள் அல்லாத, அவதாரமாக அழைக்கப்படாத, அவனுல் அனுப்பப்படாத தள்ளி வைக்கப்பட்ட, புனித ஆவியால் நிரப்பப்படாத இலெளகிகர்கள் செய்த சாதனைகள் என்ன, என்பதையும் பார்ப்போம்.

ஹிந்துக்கள், எகிப்தியர், கிரேக்கர்கள், ரோமர்கள்—அவர்களுடைய கவிஞர்கள், தத்துவ ஞானிகள், வேதாந்திகள் ஆகியவர்களை யெல்லாம் விட்டு விட்டு நவீன காலத்துக்கு வருவோம்.

கிறிஸ்து பிறந்து பத்து நூற்றாண்டுகளுக்குப்பின், ஓர் மாபெரும் சாம்ராஜ்யத்தை ஆண்டவர்களாகிய சாரசன்கள் (Saracens), "மங்கோலியா, தார்தாரி, பெர்ஷியா, மெசபொடாமியா, சிரியா, எகிப்து, வட ஆப்பிரிக்கா, மொரொக்கோ, பெஸ், ஸ்பெயின் ஆகிய இடங்களிலே கல்லூரிகளை நிறுவினர்"

சாரசன்கள் ஆளுகைக்கு உட்பட்டிருந்த பூமண்டலம் ரோம சாம்ராஜ்யத்தைவிட பெரியது.

• அவர்கள் கல்லூரிகள் மட்டும் வைத்திருக்கவில்லை. வான் நிலைய ஆராய்ச்சிக் கூடங்களும் வைத்திருந்தனர். விஞ்ஞானக் கலைகள் போதிக்கப்பட்டன.

பத்து எண்களை அறிமுகப் படுத்தினர், அல்ஜீப்ரா, திரிகோண கணிதம், பின்ன முறை, சர்வே அளப்பு ஆகியவற்றை போதித்தனர். நட்சத்திரங்கள் அட்டவணை, நட்சத்திரப் படம் (Maps) ஆகியவற்றை எழுதினர். நட்சத்திரங்களுக்கு பெயர்கள் சூட்டினர், அவைதான் இன்னும் அழைக்கப்படும் பெயர்கள்! உலகின் அளவு, கிரகணங்களின் காரணங்கள், வரும் நாட்கள், ஆண்டின் கால அளவு ஆகியவைகளை கண்டு நிர்ணயித்தனர். கிரகங்கள் பலவற்றின் ஒப்பு வகைகளையும் நட்சத்திரங்களின் தன்மையையும் கணித்தனர். வான ஆராய்ச்சிக்குரிய கருவிகளை கண்டுபிடித்தனர். பலவகையான கடிகாரங்களைச் செய்தார்கள். கடிகாரத்தின் பெண்டுலத்தைக் கண்டு பிடித்தவர்கள் அவர்களே! இரசாயனக் கலையை உணர்ந்து கந்தக அமிலம், அக்கினி திராவகம், சாராயம் ஆகியவற்றை கண்டுபிடித்தனர்.

"வைத்திய முறைகளையும் விதிகளையும் முதன் முதல் பிரசுரித்தவர்கள் அவர்களே."

"வீழும் பொருள்களின் விதிகளை நிர்ணயித்தனர். பௌதீக சக்தியையும் பூமியின் ஆகர்ஷண சக்தியையும் அறிந்திருந்தனர்".

"தண்ணீரில் இருக்கும்போது பொருளின் அமுக்கம், மிதப்பு, எடை ஆகியவை பற்றி போதித்தனர்".

"கண்ணைப்பற்றிய அறிவுக் கலையில், ஒளிக் கதிர்கள் கண்ணினின்று பொருளுக்குப் போவதில்லை பொருளினின்று கண்ணுக்கு வருகிறது என்பதை கண்டுபிடித்தனர்".

பருத்தி, தோல், காகிதம், இரும்பு முதலியவைகள் உற்பத்திசெய்தனர். "செஸ் (chess) என்று சொல்லும் தாய்ப் பட விளையாட்டை கற்றுக்கொடுத்தவர்கள் அவர்கள்தான்" பல பொருளைப்பற்றிய கட்டுரைகள், நவீனங்கள், காதலோவியங்கள் தீட்டினர்.

"அவர்கள் பள்ளிகளிலே பரிணமவாத கொள்கைகளை போதனை செய்தனர்". டார்வின் (Darwin) ஸ்பென்சர் (Spencer) ஆகியோருக்கு முன்னோடிகளாயினர்.

இந்த மக்கள் கிறிஸ்தவர்களல்ல. கடவுளின் தூதன் என்று கற்பித்துக்கொண்ட ஓர் மனிதனை பின் பற்றியவர்கள். ஆனல் உண்மைக் கடவுளால் தேர்ந் தெடுக்கப்பட்ட உண்மைக் கிறிஸ்தவர்கள். புனித ஆவி குடிகொண்டிருந்த கிறீஸ்தவர்கள் நாத்திகர்களின்

நாக்குகளை அறுத்துக்கொண்டிருந்த நேரத்தில் இந்த சக்கையான மனிதர்கள் நட்சத்திர மண்டலங்களின் அமைப்பை அறிந்து கொண்டிருந்தனர். உண்மைக் கிறிஸ்துவர் தத்துவ ஞானிகளுக்கு தறுக்கண் இழைத்து சிந்தனையாளர்களின் கண்களை குருடாக்கிக் கொண்டிருந்த தருணத்தில், முகமதுவின், கடவுள் நம்பிக்கையற்ற சீடர்கள் கல்லூரிகளை நிறுவிக் கொண்டிருந்தனர். ஏட்டுப் பிரதிகள், எழுத்துப் பிரதிகளை சேகரித்துக் கொண்டிருந்தனர். இயற்கையின் உண்மைகளை ஆராய்ந்து கொண்டிருந்தனர். விஞ்ஞான வளர்ச்சிக்குத் தங்கள் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தனர். பின்னர் முகமதுவின் சீடர்கள் விஞ்ஞானத்திற்கு விரோதிகளாயினர். கிறிஸ்தவர்களை போலவே உண்மைகளை வேம்பென வெறுத்தனர். ஆண்டவன் அருள் பெற்றவர்கள் என்று சொல்லப்படுவர்கள் யாராயிருந்தாறும் சரி, அவர்கள் அத்தனைபேரும் முழு ஆற்றலுடன் பகுத்தறிவை பகிஷ்கரித்தே தீருவர். உண்மையை மறுத்தே தீருவர்.

நவீன விஞ்ஞானத்தின் அஸ்திவாரக்கல் நாட்டிய மைக்கு மூர் வகுப்பாருக்கு—முகமதுவின் சீடர்களுக்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை அறிய வேண்டியது அவசியம். அதே போல எந்த உபயோகரமான உண்மைகளுக்காகவும், கிறிஸ்துவ மதத்திற்கோ, ஆலயங்களுக்கோ நாம் கடமைப்பட வேண்டியதில்லை என்பதையும் அறிய வேண்டியது அவசியம்.

கிரேக்கர்களாலும் ரோமர்களாலும் தான் சிந்தனை வித்துக்கள் நமது மூளையிலே தூவப்பட்டன. அந்த

வித்துக்களிலிருந்து தான் நமது இலக்கியம் மலர்ந்தது என்பதையும் உணர வேண்டும். நமது மொழியின் மாபெரும் இலக்கியங்களெல்லாம் எண்ண அமைப்பை, எழிலை, முழுத்தன்மையை கிறிஸ்தவர்களிடமிருந்தோ, முகமதியர்களிடமிருந்தோ, யூதரிடமிருந்தோ பெற வில்லை. முழுக்க முழுக்க, விளக்கம் பெருத மக்களிட மிருந்தே பெற்றது என்பதையும் உணர வேண்டும். அதே போல கிறஸ்தவர்கள் விஞ்ஞானத்தின் வைரி களாய் இருந்த நேரத்தில் முகம்மதியர்கள் விஞ்ஞானத் தின் தோழர்களாய் இருந்தனர் என்பதையும் உணர வேண்டும். ஒரு காலத்தில் விஞ்ஞானத்தின் நண்பர்களா யிருந்து மற்ற மாந்தர்க்கு அதன் அருமை பெருமைகளைக் கற்பித்தவர்கள் இன்று நரகத்திலும் (துன்பபுரி) அறிஞர் களை கொடுமை பல புரிந்து கொலை செய்த மக்கள் மோட்சத்திலும் (இன்பபுரி) இருப்பதை சிந்தனை செய் யவே எவ்வளவு வேதனையாய் இருக்கிறது என்பதை நினைத்துப் பாருங்கள். இது தான் ஆண்டவனின் நீதி போலும்!

புனித ஆவி குடிகொண்டிருந்த மத்தியகால கிறிஸ் துவர்கள் புதைகுழிக்கு — மரணத்திற்குப் பின்னுள்ள பரலோகங்களைப் பற்றிய எல்லா விபரங்களையும் அறிந் திருக்கவில்லை. தரணி தட்டையானது, அதன் ஆயுள் ஐயாயிரம் ஆண்டு இருக்கும், நட்சத்திரங்கள் என்பவை இரவை சிங்காரிக்க ஏற்படுத்தப்பட்ட சின்னஞ் சிறு சுடர்கள் என இந்த ரீதியில் எண்ணினர்.

உண்மை என்னவென்றால் கிறிஸ்துவ மதம் தோன்றி ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகள் வரையிலே

கிறிஸ்துவ உலகம் முழுவதிலுமே ஒரு வானநூல் வல்லுநன் கூட தோன்றவில்லை. கிறிஸ்துவின் எந்த சீடனுக்கும் உலகத்தின் உருவத்தைப் பற்றி ஒன்றும் தெரியாது.

உலகம் உருண்டை வடிவமானது என்பதைக் காட்டியது, போப்பாண்டவரோ, புனித மதருகுவோ, புரோகிதக் கூட்டமோ, ஆண்டவனின் தூதர் என்று அழைக்கப்பட்டவரோ, அவனுல் அவதாரமாக அனுப் பப்பட்டவரோ அல்ல; ஆனல் ஓர் மாலுமி. 1519-ஆம் ஆண்டு மகெலன் (Magellan) என்ற மாலுமி ஸ்லுயினைச் சேர்ந்த செவில்லி என்ற துறைமுகத்திலி ருந்து மேற்கு நோக்கி கடற் பயணம் செய்தான். மேற்கு திசையை நோக்கியே போய் கொண்டிருந் தான். கடைசியாக 1522-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஏழாந் தேதியன்று எந்த செவில்லி துறை முகத்திலிருந்து கப்பல் கிளம்பியதோ அதே துறை முகத்தை அடைந்தது.

இப்படி உலகம் முழுவதையும் சுற்றி கடற்பயணம் செய்யப்பட்டது. ஒரு மாலுமிக்கும் மத ஏடுகளுக்கும் இடையே தகராறு இருந்து கொண்டிருந்தது. ஆனல் உண்மை மாலுமி பக்கமே ஒதுங்கி நின்றது.

1543.ஆம் ஆண்டில் கோப்பர்னிகஸ் என்பவர் 'கோள் நிலைகளின் சுழற்சி' என்ற நூலை பிரசுரித்தார். அவர் நட்சத்திரங்களின் பரப்பு, வானமண்டலவெளி, உலக பரப்பின் சிறுமை ஆகியவை பற்றிய சில கருத்துக்கள் கொண்டிருந்தார்.

பதினாறும் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்திலே, உலகத்திலே மிகப்பெரிய மனிதர்களில் ஒருவனான புருனோ என்பவன் உடன் பிறந்த மனித குலத்திற்கு தனது எண்ணங்களை நல்கினான். உலகின் பன்மையைப்பற்றி போதனை புரிந்தான். அவன் கடவுள் நம்பிக்கையற்றவன். நாத்திகன் ஆனால் கண்ணியமிக்கவன். கத்தோலிக்க மாதா கோவிலை " வெற்றிக் காண்டாமிருகம் " என அழைத்தான். பல ஆண்டுகள் சிறைச்சாலையிலே இடப்பட்டு வழக்கு மன்றத்திலே விசாரிக்கப்பட்டு, தண்டிக்கப்பட்டான். 1600-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16-ஆம் நாள் புனித ஆவி குடிகொண்டுள்ள மனிதர்களால், ரோமாபுரியில், எந்த இடத்தில் இன்று அவனது நினைவு மண்டபம் எழுந்துள்ளதோ, அதே இடத்திலே தீயிலே கொள்ளுத்தப்பட்டான். தியாகிகளிலேயே மிகப்பெரியவன், மேதை, புருனோ. தான் எதை உண்மையென்று நம்பினானோ அதற்காக உயிர்துறந்த உத்தமன். எந்த ஒரு ஆண்டவனையும் திருப்திப்படுத்தவோ, சுவர்க்கத்தைத் தேடவோ, நகரத்தைக்கண்டு மருளவோ வேண்டிய நிலையில் இல்லாத ஒரே தியாக புருஷன். ஆண்டவன் அருள் பெற்றவர்களைவிட பெருந்தன்மை படைத்தவன். அவதாரங்களைவிட சிறந்தவன். தூதர்களைவிட தூய்மையானவன். மேன்மையுடையவன். மாநிலமெங்குமுள்ள மதவாதிகளுக்கு மேலே, பல்வேறு கோட்பாடுகளை உண்டு பண்ணியவர்களுக்கு மேலே பல்வேறு மதங்களை உண்டு பண்ணியவர்களுக்கு மேலே இந்த சூதுவாது தெரியாத சுயநலமற்ற சுதந்தர மனிதன் எழுந்தான்.

ஆனால் இந்த ஒப்புவமையில்லாத மனிதனை கிறிஸ்துவர்கள், ஏசுவின் சீடர்கள் கொலை புரிந்தனர். இவர்கள் தாங்கள் கொண்டிருந்த கோட்பாட்டிற்கு உண்மையாய் நடந்துகொண்டனர். பக்தி பூண்டோர் அழியாத ஆனந்தத்தை பரிசிலாக பெறுவர் எனவும், சந்தேகிப்போர் தொலையாத துயரத்துடன் தண்டிக்கப்படுவர் எனவும் நம்பினர், அவர்கள் புனிதமானவர்கள்; ஆனால் கபடத்தன்மை படைத்தோர், பக்திமான்கள்; ஆனால் பேய்க்குணம் கொண்டோர். மதாச்சாரத்திலே நம்பிக்கையுண்டோர்; ஆனால் பழிகார புத்திக்காரர். கிறிஸ்துவைப் போன்றவர்கள்; ஆனால் கொடூர சிந்தைக்காரர். உதட்டிலே விருப்பு உடையோர்; ஆனால் உள்ளத்திலே வெறுப்பு உடையோர். இவ்வளவிற்கும் காரணம் அச்சம், அறியாமை ஆகியவைகளின் நிரபராதிகளான பலிக்கடாக்கள் அவர்கள் !

மக்கள் சாதித்ததென்ன ?

1608–ஆம் ஆண்டு லிப்பெர்சீம் (Lipper sheim) என்ற ஹாலந்து நாட்டவன், லென்சுகள் மூலம் பொருள்களைப் பெரிதாக்கிக் காட்டினன்.

தொலை நோக்காடியைக் கண்டுபிடித்தான்.

நமது கண்களுக்கு எண்ணிறந்த உலகங்களைக் காட்டி நம்மையெல்லாம் பிரபஞ்சத்தின் பிரஜைகளாக்கினன் (Citizens of the Universe).

1610–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஏழாந்தேதி இரவு கோப்பர்னிகஸ் தத்துவத்தின் உண்மைகளை

கலிலியோ விளக்கிக்காட்டினான். 1632-ல் அவன் ஆராய்ச்சி நூலாகிய 'உலகின் அமைப்பு' என்ற நூலை வெளியிட்டான்.

ஆலயவாசிகள் என்ன செய்தனர்? கலிலியோ கைதாக்கப்பட்டான்.

கடுஞ்சிறையிலிடப்பட்டான். முழந்தாளிட்டு, கரங்களிலே பைபிளை ஏந்தி, தான் செய்த தவறுக்கு வருந்துவதாகச் சொல்லுமாறு பலாத்காரப்படுத்தப் பட்டான். பத்து ஆண்டுகள் சிறைச்சாலைக்குள் அடைபட்டுக் கிடந்தான். கடைசியாக மரணம் காட்டிய 'தயாளகுணம்' அவனுக்கு சிறையிலிருந்து விடுதலையை வாங்கித்தந்தது. பின்பும் ஆலயத்தார், புனித ஆவி குடிகொண்டோர், அவனது சவத்தை எல்லோரையும் புதைக்கும் மாயானத்திலே புதைக்க மறுத்தனர். அவனது தூசிகள், அவனையார் கொடுமைப் படுத்தினார்களோ, அவர்களின் உடலங்களையும் கெடுத்துவிடும் என அஞ்சினர்.

1609-ம் ஆண்டு கெப்ளர் (Kepler) என்பவர் 'கிரகங்களின் அசைவு' என்ற நூலை வெளியிட்டார். அவர் ஆகர்ஷண சக்தியின் கவர்ச்சியைப்பற்றியும், அது பொருளுக்கும் தூரத்திற்குமுள்ள விகிதாச்சாரப்படி வேலை செய்கிறதென்பதையும் அறிந்திருந்தார். கெப்ளர் தனது மூன்று விதிகளை (Three Laws) வெளியிட்டார். தூரம், பொருள், சலனம்—இவை களின் தொடர்பை அறிந்து கணித முறைப்படி கூறினார். உலகத்தில் தோன்றிய வேறு எந்த அறிஞனும் இதைக்காட்டிலும் பெரிய காரியத்தை சாதிக்கவில்லை.

வானமண்டல ஆராய்ச்சி விஞ்ஞானமாக மாறியது. கிறிஸ்துவ மார்க்கம் மூட நம்பிக்கையாக மாறியது.

பின்னர் நியூடன் (Newton), ஹெர்ச்செல் (Herchel), லாப்லஸ் (Laplace) போன்றோர் தோன்றினர். ஜோஷுவா (Joshua), எலிஜா (Elija) ஆகியோர் வான ஆராய்ச்சி அறிவு மலர்ந்தவர்களின் மூளையிலிருந்து வாடியது. ஜெகோவா அறிவற்ற காட்டுமிராண்டிக் கடவுளாக கருதப்பட்டது.

இயற்கையின் காரியங்கள் வேறு தடைகளால் நிற்பதில்லை என மக்கள் உணர ஆரம்பித்தனர். கிரகணங்கள் ஆண்டவனின் சினத்தால் ஏற்படுவதில்லை; சாம்ராஜ்யங்களின் சரிவிற்கோ, மன்னர்களின் மரணத்திற்கோ எரி நட்சந்திரங்கள் காரணமில்லை, மனிதனின் செயல்களைப்பற்றி கவலையின்றி நட்சத்திரங்கள் அதன் வழியிலே சுழலுகின்றன என்ற உண்மைகளையும் உணர ஆரம்பித்தனர். புனிதக் கிழக்கில் அருணோதயம் தென்பட்டது !

மக்கள் சாதித்த தென்ன ?

சில ஆண்டுகளுக்கு முன்னர், சுயமாக சிந்தனை செய்கிற அளவிற்கு சிலர் குறும்புக்காரர்களாயினர். அவர்கள் பார்க்கவும், கூர்ந்து கவனிக்கவும் தொடங்கினர். பின்னர் பார்த்ததை பகுத்தறியவும் தலைப்பட்டனர். இந்த உலகத்தைப் பற்றி கவலை செலுத்த வேண்டிய அளவிற்கு சொர்க்கத்தையும் நரகத்தையும் மறந்தனர். பாறைகளையும் மண்களையும் பரிட்சிக்கத் தொடங்கினர். ஆடுகளும் கடல்களும் செய்திருப்பவை

களைக் கவனித்தனர். பூமியின் மேல் மூடியைப் பற்றிய சில உண்மைகளைத் தெரிந்தனர். பெரும்பாலான பாறைகள் — 70,000 அடி ஆழ கனமுள்ளவை — தண்ணீரில் தேக்கப்பட்டு அடிக்கடுக்காக இருப்பதாகக் கண்டனர். நிலக்கரி, ஒருகாலத்தில் மரக்கறிப் பொருளே என அறிந்தனர். நிலக்கரியை உண்டுபண்ண தேவையான காலத்தை கணித முறைப்படிகணித்தனர். அதன்படி அந்தப் பொருள்நி லக்கரியாக மாறுவதற்கு அறுபது அல்லது எழுபது இலட்சம் ஆண்டுகள் பிடித்திருக்க வேண்டுமென முடிவு கட்டினர். செங்குத்தான உயரமான சுண்ணும்பு மலைகளை பரிசோதனை செய்தனர். மிகச் சிறிய உருவமமைந்த உயிர்களால் கட்டப்பட்ட கூடுகளாக-அதாவது அந்தக் கூடுகளின் தூசிகள் - இருக்க வேண்டுமென கண்டனர். இந்த தூசி ஐரோப்பா அளவு பரப்புள்ள இடங்களில், தங்கியிருந்தது சிலஇடங்களில், இந்த சுண்ணும்பு ஒரு மைல் ஆழ கனமுள்ளது. இவைகளெல்லாம் இப்படியாவதற்கு பல இலட்சம் ஆண்டுகள் பிடித்திருக்க வேண்டும்.

இந்தத் துறையில் தலை சிறந்த வல்லுநர் லேல் (Lyell) என்பவர், நமக்குத் தெரிந்த இந்த மாற்றங்கள் நிகழுவதற்கே இருபது கோடி ஆண்டுகள் பிடித்திருக்க வேண்டுமென விளம்புகிறார். புராதன கடல்களின் நிசப்த ஆழத்திற்கிடையே, தூசுக்களின் எண்ண முடியாத அணுக்கள், மெதுவாக காலமெல்லாம் விழுந்ததன் விளைவாய் உண்டான பரந்த வண்டலை எண்ணிப் பாருங்கள்? தங்கள் சின்னஞ் சிறு இல்லங்களை அமைத்துக்கொண்டு, பிறருக்கு வாழ்

வளித்துக்கொண்டு — அலைகளுக்குக் கீழே தங்களது அரண்மனைகளை விட்டு விட்டு, எண்ணற்ற தலைமுறை, தலைமுறையாக கண்டங்கள், தீவுகள் ஆகியவற்றின் அஸ்திவாரங்களைக் கட்டிக்கொண்டிருக்கும் சிறு நுண்ணிய உருவமமைந்த உயிரிகளை சிந்தனை செய்து பாருங்கள் !

இப்போது நாம் காணும் வாழ்க்கைக்கு அப்பால் பறக்கும் பல்லிகள், பயங்கர பூதங்கள் ஆகியவற்றிற்கு அப்பால், புஸ் என்று சத்தமிடும் சர்ப்பங்களுக்கும் கொடுக்குடன்கூடிய விஷ ஜந்துகளுக்கும் அப்பால், பார் முழுதும் பாறைகளால் மூடப்பட்டிருந்த காலத் திற்கும் அப்பால், முதல் உயிரினம் தோன்றுவதற்கு அப்பால், மலைகள், மாநதிகள், கடல் ஆகியவை தோன்றுவதற்கு அப்பால், அலைகள், நெருப்பு ஆகியவை களுக்கு அப்பால், உலகம் முழுதும் அக்கினி பிழம்பாய் நட்சத்திரங்கள் சூழ்ந்த ஆதவனின் வெம்மையில் உருகியதற்கும் அப்பால் உள்ள காலத்தை எண்ணிப் பாருங்கள் !

இவைகளுக்கிடையே எத்தனை இரவுகள்! எத்தனை பகல்கள் கழிந்திருக்கின்றன என்பதை கற்பனை செய்து பாருங்கள் ! பழமை என்ற பாலைவனத்தில்; உலர்ந்து போன, காலமெனும் இலைச் சருகுகளாகிய நூற்றாண்டு களை சிந்தனை செய்து பாருங்கள் !

இயற்கை அவசரக்காரியல்ல, காலத்தை விரயம் செய்யவும் முடியாது: 'இழக்கவும் முடியாது. எதிர் காலம் அமரத்வம்' பொருந்தியதாய் காட்சியளிக்கிறது. பழமையோ, எப்படி இருந்ததோ அப்படியல்ல, எப்படி

இருந்திருக்க வேண்டுமோ அப்படி காட்சியளிக்கிறது. எல்லையற்ற இயற்கைக்கு இலாபமும் தெரியாது; நஷ்டமும் தெரியாது.

உலகின் வரலாறு, மனிதகுலத்தின் வரலாறு ஓரளவு நமக்குத் தெரியும். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக பழைய உலகிலே மனிதன் தேவைக்கும் போருக்கு மிடையே, பஞ்சத்திற்கும் கொள்ளை நோயுக்கு மிடையே, அறியாமைக்கும் குற்றத்திற்குமிடையே, அச்சத்திற்கும் நம்பிக்கைக்குமிடையே போராடியுள் ளான், வாழ்ந்துள்ளான் என்பதும் நமக்குத் தெரியும்.

குற்றமற்ற போப்பாண்டவர்கள், எண்ணிறந்த குருமார்கள், புரோகிதர்கள், மன்னர்மன்னர்கள், நாட்டின் நாயகர்கள் ஆகிய அத்தனை பேரும் அறிவற்ற காட்டுமிராண்டிகளின் கற்பனையை எல்லையற்ற ஈசனின் ஞானோபதேசம் என்று தவறுதலாக கருதிக்கொண்டிருந் தார்கள் என்பதும் நமக்குத் தெரியும்.

இறுதியாக, புனித ஏடுகளிலே படைப்பின் வரலாறு பற்றியும், பொருள்களின் ஆரம்பம் குறித்தும் கூறப்பட்டிருப்பவை உண்மையல்ல என்பது மாத்திர மல்ல, அவை வடிகட்டிய முட்டாள்தனம் என்பதும் நமக்குத் தெரியும். அருள் பெற்றவர்கள் என்பவர் களுக்கு தெரியாது என்பதும், அவர்களுக்கு அருள் தந்த ஆண்டவனுக்கே தெரியாது என்பதும் நமக்கு தெரியும்.

பழைய புராண இதிகாசங்களை நாம் நம்புவதில்லை. உண்மையின் அடிப்படை மீதே எதையும் ஏற்றுக் கொள்கிறோம். தாரணியும் தாரகைகளுமே நமக்கு சாட்சியங்கள் !

மக்கள் சாதித்ததென்ன ?

உலகிலுள்ள பல்வேறு மதங்கள், புண்ணிய ஏடுகள் தூதர்களின் மொழிகள், உபதேசங்கள் ஆகியவற்றை படித்துள்ளனர். ஆராய்ச்சி புரிந்துள்ளனர். சின்னங்கள், சம்பிரதாயங்கள், பிரார்த்தனைகள், காணிக்கைகள் ஆகிய வற்றை தெரிந்துள்ளனர். எல்லா மதங்களும் ஒன்று தான், ஒரே மாதிரி காரணங்களால் உற்பத்தியானவை, இயற்கை உண்மைகளை தவறுதலாக புரிந்துகொண்ட. தன் விளைவு, அறியாமை, அச்சம், அற்புதம், அபத்தம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைக்கப்பட்டவை என்பதை எடுத்துக் காட்டியுள்ளனர்.

கிறிஸ்துவ மதமும் மற்ற மதங்களைப் போல ஒரு மதம்தான், ஆண்டவனால் அருளப்பட்டதல்ல, இயற்கை யாக வளர்ந்தது, அதன் கடவுளர்கள், பூதங்கள், சொர்க்க நரகங்கள், ஆகிய எல்லாம் கடன் வாங்கப் பட்டவை. அதன் சம்பிரதாயங்களும் சடங்குகளும் மற்ற மதங்களின் நினைவு மலர், அதனுடைய எந்த பகுதியும் சொர்க்கத்திலிருந்து குதித்து வரவில்லை. எல்லாம் காட்டுமிராண்டி மனிதர்களால் உண்டு பண்ணப்பட்டவை என்பதைக் கண்டனர்.

ஜெகோவா என்பது ஓர் மலை ஜாதி கடவுள், அதன் மூதாதையர், யூப்ரடிஸ். நதிக்கரையில்-டைக்ரிஸ் நதிக் கரையில்-கங்கை நதிக்கரையில்-நைல் நதிக்கரையில் வாழ்ந்தவர்கள்-அவர்களின் மூதாதையர் அவர்களை விட காட்டுமிராண்டிகள் என்பதையும் கண்டனர்.

மக்கள் சாதித்ததென்ன?

இயற்கையின் பலநிலைகளை ஆராய்ந்துள்ளனர். உலகின் பல சக்திகளை உபயோகிக்க—அதாவது நீர் வீழ்ச்சியின் ஆற்றலை, வீசுகின்ற காற்றின் இரகசியத்தைக் கண்டுள்ளனர். தண்ணீரை நீராவியாக மாற்றியுள்ளனர். ஓய்வின்றி மனித இனத்திற்கு உழைக்கும் பூதாகரமான பல இயந்திரங்களைக் கண்டுள்ளனர். மின்னலை தூதுவனுகவும், அடிமைச் சேவகனுகவும் செய்துள்ளனர். அச்சு எழுத்துக்களைக் கண்டு, அச்சுக் கலையைக் கற்றுத்தந்தனர். அதன் பயனுய் உலகின் அறிவுச் செல்வத்தைப் பாதுகாக்கவும், மற்றவர்களுக்கு பரிமாறவும் வழி கோலினர். தந்திக்கம்பிகளின் மூலம் பல கண்டங்களை, பெருங்கரங்களை, சிறு பட்டினங்களை இணைத்து குவலயம் முழுவதையும் ஒரு குடும்பமாக ஆக்கினர். தூரத்தைத் துரத்தி அறிவை அகிலம் முழுவதற்கும் பொதுவாக்கினர். உணவை உற்பத்தி செய்ய, உடைகளை நெய்ய, உறையுளை கட்ட வழிகளை கற்பித்தனர்; நிலத்தை பாதைகளாலும் தண்டவாளத்தாலும், கடலை கப்பலாலும் நிரப்பினர். வாணிபத்தின் வகை வகையான கருவிகளையும், தொழில் முறையின் பல ஆயுதங்களையும் தந்தனர். பல ஓவியச்சிலைகளைச் செதுக்கினர். சித்திரங்களைத் தீட்டினர். வடிவாலும் வண்ணத்தாலும் வையகத்தையே மாயசக்தி பொருந்திய தாக்கினர். உடலையும் உள்ளத்தையும் வாட்டிய பல நோய்களின் காரணங்களையும் சிகிட்சை முறைகளையும் அளித்தனர். பல சங்கீதக் கருவிகளை நல்கினர் பெரும் சரஹித்திய கர்த்தாக்களும், இசை வாணர்

களும், வரண்ட காற்றை, மனதை மாசற்ற தாக்குகிற மதுரமான, மகோன்னதமான வசீகர கானங்களாக மாற்றினர்.

அச்சம் என்கிற சிறைச்சாலைகளிலிருந்து நம்மை விடுவித்திருக்கின்றனர். மூட நம்பிக்கை என்கின்ற கொடிய வன மிருகங்களின் கோரப்பற்கள், நகங்கள் ஆகியவற்றின் பிடிப்பிலிருந்து காப்பாற்றியுள்ளனர்.

சிந்தனை உரிமையையும் சொந்த எண்ணங்களை இயம்புவதற்கு ஊக்கத்தையும் வழங்கியுள்ளனர். பயங்காளிகளை, அடிமைகளை, கோழைகளை, தாள் வணங்கும் தாசர்களை, உண்மையை உணரச்செய்து, உரிமையுள்ள மனிதர்களாக ஆக்கியுள்ளனர். பேய், பிசாசுகள் தரித்திருந்த மணி மகுடங்களை கழற்றி எறிந்தனர். பூதங்களிடமிருந்து ஆட்சிக்கோலை கைப் பற்றி புவியை அதன் புதல்வர்களாகிய மனிதரிடம் ஒப்படைத்தனர். பயம் என்கிற பிசாசுகளை இருதயத் திலேயிருந்து விரட்டி நரகமென்னும் அனற்கொழுந்து களை அவித்துள்ளனர்.

உலகம் என்ற மாபெரும் நூலின் சில ஏடுகளை அறிந்திருந்தனர். மங்கிய பழமையில், காலமென்னும் ஓய்வில்லாத கரங்களால் கற்பாறைகளிலே செதுக்கப் பட்டிருந்த சில பல சேதிகளை சிதைத்தனர். உலகின் ஒற்பற்ற சக்திகளான, சலியாத பணியாட்களாகிய காற்றும் கடலலையும், கனலும் கடும்பனியும், பிறப்பும் இறப்பும், என்னென்ன செய்திருக்கின்றன என்பதை செப்பியுள்ளனர்.

நமது தலைக்கு மேலே ஒளிவிடும் தாரகைகளின் தன்மையைத் தெரிந்து, எண்ணற்ற சூரியர்களால் நிரப்பி, கண்ணுக்குத் தெரியும் வான மண்டலத்தின் வெளியை விரிவுபடுத்தியுள்ளனர்.

பொருள்களின் குணங்களை, வஸ்துக்களின் இயல்பை,—வேறுபடுத்துவது, பிரிப்பது, சேர்ப்பது ஆகியவற்றின் தன்மைகளைக் கண்டுள்ளனர். அதன் விளைவாக நல்லனவற்றைக் கொள்ளவும் தீயவற்றைத் தள்ளவும் செய்துள்ளனர்.

உயர்ந்த கணித நூல் அறிவை—நட்சத்திர மண்டலங்களை அளக்கும் முறையை, அவைகளுக்கு இடையே உள்ள தூரத்தை, அந்த கிரகங்கள் செல்லும் வேகத்தின் அளவை, அவற்றின் பொருண்மை, கனம் ஆகியவற்றை, இன்னும் திக்குத் திசையற்ற கடல் வெளியிலே மாலுமி கலஞ்செலுத்த உபயோகிக்கும் முறை அத்தனையும் அறிவித்துள்ளனர்.

எவை, எவை அறிவுச் செல்வமோ, கலையோ, இலக்கியமோ அவை அத்தனையும் அளித்துள்ளனர். வாழ்க்கையை வாழ்வதற்கேற்ற முறையில் ஆக்கியுள்ளனர்.

சகல வசதிகளாலும், வாழ்க்கையின் சுகபோக, வசீகர ஆடம்பரப் பொருள்களாலும் வையகத்தை நிரப்பியுள்ளனர்.

இவை அத்தனையும் மக்களால்—உலக மாந்தரால் செய்யப்பட்டது. அவர்களெல்லாம் அவதாரம் செய்த வர்களோ ஆண்டவனால் அனுப்பப்பட்டவர்களோ

அல்ல, கர்த்தரின் அருளைப் பெற்றவர்களல்ல. இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளையோ, இறைவனின் அநுக்கிரகத்தையோ பெற்றவர்களல்ல. அவர்கள் மதியை உபயோகித்தனர். உண்மைகளை உற்று நோக்கி பதிவு செய்தனர் பகுத்தறிவில் நம்பிக்கை வைத்தனர். பொருமைக் கோலம்பூண்ட உண்மை தேடிகள்! தங்கள் கவனத்தை தரணியிள்ள நிலைமைகளுக்கு திருப்பினர். அவர்கள் குருமார்களல்ல, ஆனல் கூர்த்த மதிபடைத்த அறிஞர்கள், அவர்கள் தங்களுக்காக, தங்கள் மனைவி, மக்களுக்காக, மன்பதையின் நன்மைக்காக உழைத்தனர் இன்று எவை எவை நமக்குத் தெரியுமோ எவை எவை நாம் இன்றுள்ள நிலைக்கு காரணமோ, அவை அத்தனைக்கும் இந்த மனிதர்களுக்கு கடமைப் பட்டுள்ளோம். அவர்கள்தான் நாகரிகத்தின் சிற்பிகள்; சுதந்தரநாடுகளின் ஸ்தாபகர்கள்; விடுதலையின் காவலர்; மூடநம்பிக்கையை முறியடித்தோர்! முன்னேற்ற மென்னும் சேனையின் மாபெரும் தளபதிகள்!

நாம் யாருக்கு நன்றி தெரிவிப்பது?

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி உச்சியில் சிந்தனைக் களஞ்சியத்திற்கிடையே, மதிவாணர்களின் வெற்றிமாலைகளுக்கிடையில், இந்த பெரும் குடியரசு நாட்டின் கொடிக்கீழ் நின்றுகொண்டு, மனிதனின் வரலாற்றின் ஒரு பகுதியைத் தெரிந்துகொண்டு, நன்றி தெரிவிப்பதற்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள இந்நன்நாளில், நான் மிக மிக மரியாதையுடன் ஆதி நாட்களின் நல்ல ஆடவர்களுக்கு மகளிருக்கு — கனிவுள்ள தந்தைமார்களுக்கு—கருணைபொழிந்த தாய்மார்களுக்கு எனது நன்றியை மிகமிக மரியாதையுடன்

தெரிவித்துக்கொள்கிறேன், முதன் முதலில் அன்பு மொழி பேசிய தந்தைக்கு—முதன் முதலில் தனது முகத்தைக்கண்டு அன்பு மொழி பேசிய அன்னைக்கு எனது நன்றி உரித்தாகுக. முதல் உண்மை நண்பனுக்கு, தாங்களும் தங்கள் குழந்தை — குட்டிகளும் வாழ்வதற்காக வேட்டையாடிய, மீன் பிடித்த காட்டு மிராண்டி மக்களுக்கு என் நன்றி.

கட்டாந்தரைகளை பண்படுத்த, காடுகளை அழித்து கழனி ஆக்கியோருக்கு கரடுமுரடான வீடுகளமைத்து அதிலே கணப்பு அடுப்புகளின் ஜோதியிலே தங்களது இன்பக் குழந்தைகளின் வதனங்களை நோக்கியோருக்கு — இராட்டையுங் தறியும் கண்டு நூற்பதற்கும் நெய்வதற்கும் கற்றுக் கொடுத்தோருக்கு— காய்ந்த புல்வெளிகளை கணக்கற்ற தானிய வகைகள் விளையும் நிலமாக—கரம்பு நிலங்களை கனி குலுங்கும் இடங்களாக—புற்பூண்டு வகைகளை பூந்தோட்டமாக வேளாண்மையால் மாற்றியோருக்கு — நமது இதயங்களிலே கலையின் வித்துக்களை தூவியோருக்கு எனது நன்றியைத் தெரிவிக்கிறேன்.

உலகின் அருணோதயகால கவிஞர்களுக்கு—அற்புதங்களை உரைத்தோருக்கு—கட்டுக் கதைகளை புனைந்தோருக்கு—களிப்பு, துயரம், நம்பிக்கை, காதல்—இவைகளை கீதமாக இசைந்தோருக்கு என் நன்றி. கற்களிலே வடிவங்களைச் செதுக்கிய சிற்பிக்கு—இருளாலும் ஒளியாலும் மனித வதனத்தை வடித்த அந்த கலைஞனுக்கு எனது நன்றி. உண்மைகளை அடைய மூளையை எப்படி உபயோகிக்க வேண்டுமெனும்

முறையை கற்பித்த தத்துவ ஞானிகளுக்கு—சிந்தனை யாளர்களுக்கு எனது நன்றி.

வானமண்டலங்களை ஆராய்ந்து, தாரகை கூட்டங்களின் இரகசியங்களை உரைத்த வானநூல் வல்லுநனுக்கு—பழம் பெரும் பாறைகளிலே, அலையாலும் நெருப்பாலும், பனியாலும் வரையப்பட்ட கோடுகளிலே உலக வரலாற்றின் கதையைக்கண்டு கூறிய நில நூல் அறிஞனுக்கு—வாழ்வின் விசித்திரங்களை யெல்லாம், எலும்பு, தசை, நரம்பு ஆகியவைகளில் காட்டிய உடற்கூறு முறைக்காரனுக்கு — இயற்கை இரகசியங்களை யெல்லாம் கண்டு தந்த இரசாயன வாதிக்கு — வேதனை என்ற புருவத்தின் மீது விஞ்ஞானம் என்ற கரத்தால் தொடுவதால், அந்த கரத்தின் மாயாசக்தியின் முன் வேதனை மறைகிற அத்தகைய ஆற்றல்கொண்ட டாக்டர்களுக்கு — இயற்கையின் எண்ணத்தைத் தோல்வியுறச் செய்து, அது அழிக்க விரும்பும் உயிர்களை பத்திரமாக பாதுகாக்கும் சர்ஜன்களுக்கு எனது நன்றி உரித்தாகுக.

வருந்தும் மூளையை தங்கள் மென்மைக் கனவுகளுடன் கூடிய தூக்கத்துடன் ஆலிங்கனம் செய்து கொள்கிற க்ளோராபாரம் முறையைக் கண்டுபிடித்தோருக்கு எனது நன்றி. பெரிய எண்ணங்கள், உண்மைகள் ஆகியவற்றை சாகா வரம்பெற்றதாக ஆக்கியதற்கு கருவியாய் அமைந்த எழுத்துக்கள், அச்சுப்பொறி ஆக்கியவற்றை கண்டுபிடித்தோருக்கு பெரிய என்ஜின்கள், நீராவிக்கப்பல்கள், புகைவண்டி, தந்திக்கம்பி ஆகியவற்றைக் கண்டுபிடித்தோருக்கு —

வாழ்வின் உபயோகத்திற்கும் ஆடம்பரத்திற்கும் எண்ணற்ற பொருள்களை கண்டுபிடித்த எல்லா கண்டுபிடிப்பாளருக்கும் எனது நன்றி.

பாட்டாளி மக்களுக்கு, பாசமுள்ள மாதாக்களுக்கு, பயனுள்ள மகளிருக்கு என் நன்றி. அவர்கள்தான் மாந்தர் குளத்தின் நன்மை நாடிகள் !

குண்டூசியைக் கண்டுபிடித்தவன் குவலயத்தில் வாழ்ந்த அத்தனை குருமார்கள், போப்பாண்டவர்கள், புரோகிதர்கள், பாதிரிகள். பண்டாரங்கள், அர்ச்சகர்கள், ஆண்டவனின் அடியார்கள், ஆகியோரைவிட ஆயிர மடங்கு நன்மைபுரிந்துள்ளான்.

தீக்குச்சியைக் கண்டுபிடித்தவன் மதஸ்தாபனத்தை நிறுவியவர்களைவிட — சித்தாந்தங்களின் சிற்பிகளைவிட — வேதாந்த விற்பன்னர்களைவிட — கபட சந்நியாசிகளைவிட — சுயநல சாமியார்களைவிட ஜன சமூகத்தின் சுகவாழ்விற்கும் சௌகரியத்திற்கும் அதிக நன்மை புரிந்துள்ளான்.

தாங்கள் மனதார நம்பிய எண்ணங்களை உரைத்து, தங்கள் உள்ளத்திற்கு உண்மையாய் நடந்து தங்கள் உள்ளத்தின் உரத்தைப் பாதுகாத்த ஆடவர் பெண்டிர்க்கு என் நன்றி.

கிரேக்க நாட்டின், ரோம் நாட்டின் சிந்தனையாளர்களாகிய சினே (Zeno) எபிகுரஸ், (Epicurus) சிசிரோ (Cicero) லுக்ரிஷியஸ் (Lucretius) ஆகியோருக்கு

என் நன்றி. புருஷர்களிலே தீரமிக்க புருனே (Bruno) வுக்கு, நேர்மை மிக்க ஸ்பைனோசா (Spinoza) விற்கு எனது நன்றி.

எந்த வால்டேரின் (Voltaire) எண்ணங்கள் மனித மூளையில் சிந்தனைத் தீயைக் கொழுத்தி, மூட நம்பிக்கை யெனும் சிறைக்கதவுகளைத் திறந்து பல கோடி மக்களுக்கு விடுதலை வாழ்வை வழங்கியதோ அந்த வால்டேருக்கு என் நன்றி.

வால்டேர் என்ற பெயரே ஒளியை உமிழும் திருப்பெயர். வால்டேர், மூடநம்பிக்கை யெனும் இருளால் அணைத்து அவிக்கமுடியாத வானத்துத் தாரகை!

பெரும் பாவணர்களுக்கு நாடக ஆசிரியர்களுக்கு என் நன்றி. ஹோமருக்கு (Homer) எஸ்சைலசுக்கு (Aeschylus) என் நன்றி. அவர்களுக்கு மேலாக ஷேக்ஸ்பியருக்கு (Shakespeare) என் நன்றி. தனது இதயத் துடிப்புகளை இசைப் பாடல்களாக வடித்துள்ளமைக்கு, சுடர் விடும் சொல்லோவியங்களாக தந்தமைக்கு பர்ன்சுக்கு (Burns) என் நன்றி. 'வானம்பாடி'க்காக ஷெல்லிக்கு (Shelley) என் நன்றி. 'கிரிஷியன் சவப்பெட்டி'க்காக கீட்சுக்கு (Keats) என் நன்றி. 'சிலான் கைதி'க்காக பைரனுக்கு (Byron) என் நன்றி. தலைசிறந்த நாவலாசிரியர்களுக்கு என் நன்றி. சிற்பிகளுக்கு எனது நன்றி. வீனஸ் டி மிலோவை (Venus de Milo) செதுக்கி சிற்பமாக வடித்த பேர் தெரியாத மனிதனுக்கு என் நன்றி. சித்திர வேலைக் காரர்களுக்கு—டுரம் ராண்ட், கொராட் ஆகியோருக்கு

என் நன்றி. யார் யார், வாழ்வே அலங்காரப்படுத்தி, வளப்படுத்தி, மேதைத் தன்மை கொடுத்தார்களோ, யார் யார் உயர்ந்த உன்னதமான. வீரமமைந்த கலைப் பண்பு நிறைந்த இலட்சியங்களை உண்டு பண்ணினார்களோ அவர்கள் எல்லோருக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கிறேன்.

மனிதன் உரிமைக்கு பாதுகாவல் புரிந்த அரசியல் வாதிகளுக்கு என் நன்றி. எந்த பெயினுடைய (Paine) பேரறிவு மக்கள் இதயங்களிலே விடுதலை வித்துக்களை விதைத்ததோ, அந்த பெயினுக்கு என் நன்றி. எந்த ஜெப்பர்சன் (Jefferson) சுதந்திரத்திற்காக கூறிய வலிவுள்ள வாசகங்கள், பார் முழுவதும் பவனி வந்ததோ, அந்த ஜெப்பர்சனுக்கு என் நன்றி. பிரகடனத்திற்காக லிங்கனுக்கு (Linchon) எனது நன்றி. அவன் பெற்ற வெற்றிகளுக்காக கிராண்ட் (Grant) க்கு எனது நன்றி. இன்னும் மனிதனின் விடுதலைக்கும் உரிமைக்கும் போராடிய எண்ணிறந்த மற்றையோருக்கு எனது நன்றி. இறந்தவர், இருப்பவர் எல்லோருக்கும் எனது நன்றி.

ஆற்றல் மிக்க விஞ்ஞானிகளுக்கு — உண்மை என்ற அடித்தளத்தின்மீது தங்கள் ஆராய்ச்சி மாளிகையை அமைத்த விஞ்ஞானிகளுக்கு எனது நன்றி. எந்த விஞ்ஞானிமுன் மதவாதி மடமை நிறைந்தவன் போலவும் வெறுப்பு கொண்டவன் போலவும் தோன்றுகிறானோ அந்த விஞ்ஞானிக்கு என் நன்றி.

விஞ்ஞானி, கொலை புரியவில்லை. கூடப்பிறந்த வரை கொடுஞ்சிறையில் அடைக்கவில்லை. கால்களில் விலங்குகளை பூட்டவில்லை. சிறைச்சாலைகளைக் கட்ட

வில்லை. தூக்குமேடைகளை எழுப்பவில்லை. சிலுக்கக் காய்ந்த இரும்பினால் சூடுகள் போடவில்லை. வேதனை யந்திரத்திலே அங்கங்களைப் பிய்க்கவில்லை. இரும்பு பூட்ஸ்களின் கீழ் எலும்புகளை நொறுக்கவில்லை. யார் கண்களையும் குருடாக்கவில்லை. யார் நாக்கையும் அறுத்தெரியவில்லை. தீக்குண்டங்களை வளர்க்கவில்லை. ஆண்டவன் அருள் பெற்றவர்கள் என்றோ, அவதாரங் கள் என்றோ, தூதுவர்களென்றோ பாசாங்கு செய்யவில்லை. உரிமை பாராட்டிக்கொள்ளவில்லை. அவர்கள் மதிபடைத்த மாசற்ற மனிதர்கள். அவ்வளவு தான்! பலாத்காரத்தையோ, பயத்தையோ துணைக்க ழைக்கவில்லை, மனிதர்கள் சகிக்கமுடியாத வேதனை, சவுக்கு ஆகியவைகளின்மூலம் ஆளப்பட வேண்டியவர் கள் என்றோ, குழந்தைகள் முட்டாள் தனமான கோட் பாடு என்ற தொட்டிலில் இடப்பட்டு பொய் என்கிற தாலாட்டுப் பாடி ஏமாற்றப்பட வேண்டியவர்கள் என்றோ எண்ணுதவர்கள். அவர்கள் ரணப்படுத்த வில்லை; குணப்படுத்தினர்கள். வாழ்வை கொன்று வதைக்கவில்லை; மாறுக வாழ்வை வளர்த்தனர். அடிமை கொள்ளவில்லை; ஆனால் அடிமைச் சங்கிலிகளை உடைத்தெரிந்து மக்களுக்கு விடுதலை தந்தனர். அறிவின் வித்துக்களை விதைத்தனர். பல இலட்சம் மக்கள் அந்த ஆனந்த அறுவடையை அறுத்திருக்கிறார்கள்; அறுத்துக் கொண்டிருக்கிறார்கள்; இனியும் அறுப்பார்கள்.

ஹம்போல்ட் (Homboldt) ஹெல்ம் ஹால்ட்ஸ் (Helmholtz) ஹெக்கல், (Halckel) புச்னர் (Buchner) ஆகியோருக்கு என் நன்றி, லமார்க்கிற்கும் (Lamarck)

அறிவுலகத்தின் எண்ணங்களை புரட்சிகரமான மாறுதல் செய்த டார்வினுக்கும் (Dawin) என் நன்றி. ஹக்ஸ்லி (Hhxley) ஸ்பென்சர் (Spencer) ஆகியோருக்கும் என் நன்றி சுருங்கச் சொன்னால் எல்லா விஞ்ஞானிகளுக்கும் என் நன்றி உரித்தாகுக.

எந்த மாவீரர்கள், அச்சம், துவேசம் ஆகிய வற்றை ஒழிக்கும் அழிவு வேலைக்காரர்களோ, எந்த மாவீரர்கள் காட்டுமிராண்டிக் கடவுளர்களை அவர்களின் சிங்காதனங்களிலிருந்து இறக்கியவர்களோ, எந்த மாவீரர்கள் வெறுப்பு எனும் நீங்காத நிரந்த நெருப்பை அணைத்ததவர்களோ, எந்த மாவீரர்கள் அடிமைச்சங்கிலி களை சுக்கு நூறாக உடைத்தெரிந்தவர்களோ, எந்த மாவீரர்கள் விடுதலை நாடுகளை நிறுவியவர்களோ, எந்த மாவீரர்கள் நியாயமான சட்டதிட்டங்களை ஆக்கியவர் களோ, எந்த மாவீரர்கள் எண்ணிறந்த போர்க்களங் களிலே போராடிப் போராடி வீழ்ந்தனரோ. எந்த மாவீரர்கள் அடைப்பட்டுக் கிடந்த சிறைச்சாலை ஆலய மாகக் கருதப்படுகிறதோ, எந்த மாவீரர்களின் இரத்தத் தால் தூக்குமேடை புனிதமடைந்ததோ, எந்த மாவீரர் கள் பகுத்தறிவின் தூதர்களோ, எந்த மாவீரர்கள் உண்மையின் சீடர்களோ. எந்த மாவீரர்கள் விடுதலை யின் போர்வீரர்களோ, எந்த மாவீரர்கள் உண்மை வெளிச்சத்தை உயரப் பிடித்து உலக முழுமையும் ஒளியால் நிரப்பினரோ, அந்த மாவீரர்கள் அத்தனை பேருக்கும் என் நன்றி.

அவர்கள் எல்லோருக்கும் எனது இதயப்பூர்வமான நன்றி.



Wrapper Printed by : RAINBOW PRINTERS, Tiruchirappalli-8